MAKKAL KURAL (Independent National Tamil Daily) 8 பக்கம் விலை ரூ.4.00

# மக்கள் குரல்

நடுநிலை நாளேடு SINCE 1973

Regd. No. TN/CC(S)DN/122/24-26

சென்னை – 12.11.2025 – புதன் ✱ மலர் – 53 ✱ இதழ் – 68

RNI No. 24383/1973 TN/PMG(CCR)/WPP-675/24-26

விழாக்கள்
சிறுகதை

TRINITY STUDIO
No. 1, 1st Main Road, UI Colony, Kodambakkam, Chennai -24
* Green Matte Studio
* Mini Auditorium
For more details:
9566690315



## * ஏளனமாக பேசிவிட்டு, பதவிக்காக பம்மினீர்களே?
## * தமிழ், தமிழர் என ஏமாற்றுகிறீர்களே?

# தி.மு.க. மீது விஜய் கடும் விமர்சனம்

## ‘பவளவிழா பாப்பா – நீ நல்லவர் போல் நடிப்பதைப் பார்த்து நாடே சிரிக்கிறது’

**சென்னை, நவ. 12–**

**தி.மு.க. மீது த.வெ.க. தலைவர் விஜய் இன்று கடுமையாக விமர்சனம் செய்துள்ளார்.**

**பவளவிழா பாப்பா, நீ நல்லவர்போல நடிப்பதைப் பார்த்து நாடே சிரிக்கிறது பாப்பா என நடிகர் விஜய் தெரிவித்துள்ளார்.**

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சமீப காலமாக, ஆட்சி அதிகாரத்தில் இருந்து அதிவிரைவில் மக்களால் தூக்கி எறியப்படப் போகும் அதிகார மமதை கொண்ட கட்சி ஒன்று, அவசர கதியில் தனக்குப் பழக்கமான அவதூறு அரசியல் ஆட்டத்தைத் தொடங்கி உள்ளது. எந்தக் கட்சியைச் சொல்கிறோம் என்று தெரிகிறதா? அவதூறு ஒன்றையே அடிப்படை அரசியல் கோட்பாடாகக் கொண்ட கட்சி வேறு எந்தக் கட்சியாக இருக்கும் என்று சொல்லித்தான் தெரிய வேண்டுமா?

இப்போதெல்லாம் அந்தக் கட்சியின் ஒரே இலக்கு, நம்மைத் தூற்றுவதே. தமிழக வெற்றிக் கழகத்தை மட்டும் மூளையில் தேக்கி யோசிப்பதே அதன் முழுநேர வேலை என்றாகிவிட்டது.

### அவதூறுதான் கொள்கை

அவர்களுக்கு, 1969க்குப் பிறகு, அவதூறுதான் அரசியல் கொள்கை. லஞ்ச லாவண்யம், ஊழல்தான் லட்சியக் கோட்பாடு. இந்நிலையில் மக்களுடன் மக்களாக இதயப்பூர்வமாக இரண்டறக் கலந்த பிறகே மாபெரும் மக்கள் சக்தியுடன் அரசியலுக்கு வருகிற நம் போன்ற ஓர் இயக்கத்தைக் கண்டால், அவர்களின் மூளை மழுங்கி முனகத்தானே செய்யும்?

ஆம். அவர்களை நாம் விமர்சிப்பதாக எண்ணித்தான் அர்த்தமற்ற குற்றச்சாட்டுகளை அள்ளி வீசிக் கொக்கரிக்கின்றனர். உண்மையில் நாம், அவர்கள் மீது இன்னும் முழுமையான விமர்சனத்தைத் தொடங்கவே



இல்லை. மாறாக மிக லேசான விமர்சனங்களைத்தான் வைத்தோம். அதுவும் நசுங்காத நாகரிகத்துடன் வைத்தோம்.

நாம், அவர்கள் மீது வைக்கின்ற மிக லேசான விமர்சனங்களுக்கே மக்கள் மிக பலமான வரவேற்பை அளிக்கத் தொடங்கி உள்ளனர். அதைக் கண்டு அஞ்சி நடுங்கியதால்தான், தங்கள் எண்பேராயம் மற்றும் ஐம்பெருங்குழுக்களைக் கொண்டு அதிரி புதிரியாக ஆலோசித்தும் நம் மீது மக்கள் ஏற்றுக்கொள்ளும் எந்த ஒரு விமர்சனத்தையும் வைக்கவே இயலவில்லை. அத்தகைய இயலாமையில், அந்தக் கட்சியின் தலைவர் கைக்கொண்டதுதான் ‘எந்தக் கொம்பனாலும் எங்களை, எங்கள் ஆட்சியை வீழ்த்த முடியாது’ என்கிற அதிகார மயக்க முழக்கம்.

### தமிழ் என ஏமாற்றுகிறார்

தங்களைக் கொள்கைவாதிகளாக அடிக்கடி காட்டிக்கொள்வதற்காக, எல்லோரையும் ஏமாற்றுவதற்காக, தமிழ்நாடு, தமிழ் மொழி, தமிழினம்தான் தங்கள் உயிர் என்றும் மண், மொழி, மானம்தான் தங்கள் தலையாய கொள்கை என்று ஒரு சம்பிரதாயச் சங்கை முழங்கத் தொடங்கி உள்ளார், அக்கட்சியின்

(8–ம் பக்கம் பார்க்க)

# அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, கே.என்.நேரு, அன்பில் மகேஷ் வீடுகளுக்கு வெடிகுண்டு மிரட்டல்

## குற்றவாளிகள் விரைவில் கைது செய்யப்படுவர்: சென்னை கமிஷனர் அருண் உறுதி

**சென்னை, நவ. 12–**

**அமைச்சர்கள் பி.கே. சேகர்பாபு, கே.என்.நேரு, அன்பில் மகேஷ் வீடுகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.**

நாடு முழுவதும் கடந்த சில மாதங்களாக அரசியல் கட்சித் தலைவர்கள், திரை பிரபலங்கள், பள்ளிகள், விமானங்கள் மற்றும் விமான நிலையங்களுக்கு சமூக ஊடகங்கள் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டு வருகிறது. அது போல, இன்று தமிழக டி.ஜி.பி. அலுவலகத்திற்கு ஒரு மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் வந்துள்ளது. அதில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபுவின் வீட்டிற்கு வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாக மிரட்டல் விடுக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு வீட்டில் போலீசார் மற்றும் வெடிகுண்டு நிபுணர்கள் தீவிரச் சோதனை நடத்தினர். சோதனையின் முடிவில், மிரட்டல் வெறும் புரளி என தெரியவந்தது. இதனை தொடர்ந்து, மிரட்டல் குறித்துப் போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

### கமிஷனர் அருண்

இந்த நிலையில், இந்த வெடிகுண்டு மிரட்டல்கள் வெளிநாடுகளில் இருந்து வரவில்லை. ஏனெனில் சட்ட விரோதச் செயலுக்கு பயன்படுத்தப்படும் டார், விபிஎன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மின்னஞ்சல் அனுப்பப்படுவதால், அதை வைத்து துப்பு துலக்குவதில் தொடர்ந்து இடர்ப்பாடு ஏற்பட்டு வருகிறது. இருப்பினும் இதன் பின்னணியில் இருவர் இருப்பதும், அவர்கள் சென்னையைச் சேர்ந்தவர்கள் என்பதும் தெரியவந்துள்ளது.

குற்றவாளிகளை நெருங்கி வருகிறோம். விரைவில் அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என



சென்னை பெருநகர காவல் துறை ஆணையர் ஏ.அருண் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

### திருச்சியில் அமைச்சர்கள் வீடுகளுக்கு மிரட்டல்

இந்த நிலையில், திருச்சியில் உள்ள அமைச்சர்கள் கே.என். நேரு மற்றும் அன்பில் மகேஷ் இல்லங்களுக்கும் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

திருச்சி மாநகர காவல் துறை ஆணையர் அலுவலகத்துக்கு இன்று காலை வந்த மின்னஞ்சலில் திருச்சியில் உள்ள நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என் நேரு மற்றும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் ஆகியோருடைய வீடுகளுக்கு வெடிகுண்டு வைத்துள்ளதாகவும் இன்னும் சற்று நேரத்தில் வெடித்து சிதறும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதுகுறித்து உடனடியாக வெடிகுண்டு கண்டறியும் நிபுணர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து தகவலின் அடிப்படையில் போலீசார் மற்றும் வெடிகுண்டு கண்டறியும் நிபுணர்கள் தில்லைநகரில் உள்ள அமைச்சர் கே. என். நேருவின் வீடு மற்றும் அண்ணா நகரில் உள்ள அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வீடு ஆகிய இடங்களில் சோதனை மேற்கொண்டனர். ஆனால், இந்த இரு இடங்களிலும் வெடிபொருள்கள் எதுவும் கண்டறியப்படவில்லை. வதந்தியை ஏற்படுத்தும் வகை யில் இந்த மின்னஞ்சல்கள் அனுப்பப் பட்டது தெரிய வந்தது.

## டெல்லி கார் குண்டு வெடிப்பில் திடீர் திருப்பம்

# தீபாவளி பண்டிகை நாளில் வெடிகுண்டு தாக்குதலுக்கு திட்டம்

## 10 பேர் கொண்ட குழுவை அமைத்தது என்ஐஏ

**புதுடெல்லி, நவ.12–**

**டெல்லியில் கார் குண்டுவெடிப்பை நிகழ்த்திய சதிகாரர்கள் தீபாவளி பண்டிகைக்கு தாக்குதல் நடத்த திட்டமிட்டு இருந்தனர் என விசாரணையில் அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது.**

டெல்லியில் உள்ள செங்கோட்டை எதிரே போக்குவரத்து சிக்னல் பகுதியில் நேற்று முன்தினம் மாலை ஒரு கார் திடீரென வெடித்து சிதறியது. இதன் காரணமாக பக்கத்தில் நின்ற பல வாகனங்களும் தீப்பிடித்தன. இதில் 12 பேர் பலியானார்கள். 20க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

சம்பவ இடத்தில் தேசிய பாதுகாப்பு படை, புலனாய்வுப்படை, தடயவியல் நிபுணர்கள், வெடிகுண்டு நிபுணர்கள், டெல்லி போலீசார், மத்திய தொழிலக போலீஸ் படை உள்ளிட்ட பல்வேறு போலீஸ் படைகள் முழு மூச்சில் கள ஆய்வு மேற்கொண்டனர்.

போலீசாரின் அதிரடி விசாரணையில் இந்த கார் வெடிப்பு சம்பவம், தற்கொலை தாக்குதலாக இருக்கக்கூடும் என சந்தேகிக்கப்பட்டது. காரில் இருந்தவர்கள் வெடிபொருளான அம்மோனியம் நைட்ரேட், எளிதில் தீப்பற்றக்கூடிய ஆயில் ஆகியவற்றை நிரப்பிக் கொண்டு வந்து அதில் டெட்டனேட்டரை பயன்படுத்தி வெடிக்கச் செய்தது தெரிய வந்துள்ளது.

### 3 மணி நேரம் நின்ற கார்

இந்த காரைப் பற்றி போலீசார் துப்பு துலக்கினார்கள். 100க்கும் மேற்பட்ட கண்காணிப்பு கேமரா பதிவுகள் ஆய்வு செய்யப்பட்டன. இதில் அந்த கார் HR 26CE7674 என்ற எண் கொண்ட ‘ஹுண்டாய் ஐ20’. செங்கோட்டைக்கு அருகிலுள்ள வாகன நிறுத்துமிடத்தில் 3 மணி நேரத்துக்கும் மேலாக நிறுத்தப்பட்டிருந்தது. அந்த கார் வாகன நிறுத்துமிடத்தில் பிற்பகல் 3:19 மணிக்கு நுழைந்து மாலை 6:48 மணியளவில் புறப்பட்டுள்ளது, சிறிது நேரத்திலேயே அந்த கார் வெடித்துச் சிதறியது.

தாக்குதலில் பயன்படுத்தப்பட்ட கார் பல பேரிடம் கைமாறியதாக ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த கார் கடைசியாக புல்வாமா நபருக்கு கை மாறியது. தற்போதைய உரிமையாளர் புல்வாமாவை சேர்ந்த டாக்டர் உமர் முகமது என அடையாளம் காணப்பட்டது. அவரே காரை ஓட்டி சென்றுள்ளார். டாக்டர் உமரின் உடல் அடையாளம் காண முடியாத அளவுக்கு சிதைந்து போனது. இவர் பரிதாபாத்தில் உள்ள அல்பலா மருத்துவ பல்கலைக்கழகத்தில் டாக்டராக பணிபுரிந்துள்ளார்.

ஏற்கனவே உமரின் தாயார் சமீமா பேகம் மற்றும் 2 சகோதரர்களையும் போலீசார் கைது செய்துள்ளனர்.



வெடிவிபத்தில் இறந்த உமரை அடையாளம் காணும் வகையில், சமீமா பேகத்துக்கு டி.என்.ஏ. பரிசோதனை நடத்த போலீசார் முடிவு செய்துள்ளனர். இதற்காக அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட உள்ளார். மேலும் டாக்டர் உமரின் தந்தை குலாம் நபி பாத் என்பவரையும் போலீசார் கைது செய்தனர். அவருக்கும் டி.என்.ஏ. பரிசோதனை நடக்கிறது.

### 6 டாக்டர்கள் கைது

மேலும் 'ஆபரேஷன் சிந்தூர்' ராணுவ நடவடிக்கைக்கு பழி தீர்க்கும் விதமாக, ஜெய்ஷ் –இ – முகமது பயங்கரவாத அமைப்பு இந்த தாக்குதலை நடத்தியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இந்த தாக்குதலுக்கு சதித்திட்டம் தீட்டியவர்கள் அனைவரும் நன்கு படித்த டாக்டர்கள். போலீசாரின் சந்தேக பார்வை, டாக்டர் போன்ற பெரிய பதவிகளில் இருப்பவர்கள் மீது விழாது என்பதால், பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு அவர்களை மூளைச்சலவை செய்திருப்பதும் அம்பலமாகி உள்ளது.

இதுவரை 6 கொடூர டாக்டர்கள் கைது செய்யப்பட்டு இருக்கின்றனர். புல்வாமாவைச் சேர்ந்த முசாம்மில் கனி, உத்தர பிரதேசம் லக்னோவைச் சேர்ந்த பெண் டாக்டர் ஷஹீன் சயீத், ஜம்மு காஷ்மீரின் குல்காமை சேர்ந்த அதீல், புல்வாமாவைச் சேர்ந்த உமர் நபி, தெலுங்கானாவின் ஐதராபாதைச் சேர்ந்த அகமது மொஹியுதீன், ஸ்ரீநகரில் செயல்பட்டு வரும் மகாராஷா ஹரிசிங் மருத்துவமனையில் பணியாற்றி வந்த டாக்டர் தஜமுல் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் ஜெய்ஷ்–இ–முகமது தீவிரவாத அமைப்பின் ஸ்லீப்பர் செல் ஆக செயல்பட்டு உள்ளனர். பெண் மருத்துவர் ஷாகினின் அண்ணன் பர்வேஷ் அன்சாரி, உத்தர பிரதேச தலைநகர் லக்னோவில் மருத்துவராக பணியாற்றி வந்தார். அவர் தலைமறைவாகி விட்டார். அவரது வீட்டில் போலீசார் நேற்று சோதனை நடத்தினர். அப்போது ஜெய்ஷ்–இ–முகமது அமைப்பு தொடர்பான முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன.

### தீபாவளி அன்று தாக்குதல் திட்டம்

முக்கிய குற்றவாளியாக கருதப்படும் புல்வாமாவைச் சேர்ந்த முசாம்மிலிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். அவரது தொலைபேசியை போலீசார் ஆய்வு செய்தனர்.

விசாரணையின் போது அடுத்த ஆண்டு ஜனவரி 26ம் தேதி தாக்குதல் திட்டம் இருப்பதாகவும் அதன் ஒரு பகுதியாக செங்கோட்டையைச் சுற்றியுள்ள பகுதியை நோட்டமிட தானும், உமரும் வந்ததாக முசாமில் கூறினார்.

தீபாவளிக்கு மக்கள் நெரிசலான இடத்தில் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்ததாகவும், ஆனால் அதை செயல்படுத்த முடியவில்லை என்றும் அவர் போலீசாரிடம் கூறியதாக வட்டாரங்கள் தெரிவித்தன.

### 10 பேர் கொண்ட குழு

சட்டவிரோத செயல்பாடுகள் தடுப்புச் சட்டத்தின்கீழ் டெல்லி போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். இந்த வழக்கு தேசிய புலனாய்வு முகமையிடம் (என்.ஐ.ஏ.) ஒப்படைக்கப்பட்டுள்ளது. கார் வெடிவிபத்து குறித்து விசாரிக்க தேசிய புலனாய்வு அமைப்பு 10 பேர் கொண்ட சிறப்பு குழுவை அமைத்துள்ளது. ஒரு ஐ.ஜி., இரண்டு டி.ஐ.ஜி.க்கள், மூன்று எஸ்.பி.க்கள் மற்றும் டி.எஸ்.பி. அளவிலான அதிகாரிகள் அடங்கிய இந்தக் குழு, என்ஐஏ ஏடிஜி விஜய் சாகரே தலைமையில் செயல்படும். இன்று, ஜம்முகாஷ்மீர் காவல்துறை, டெல்லி காவல்துறை மற்றும் அரியானா காவல்துறையினரிடமிருந்து ஜெய்ஷ் இ முகமது பயங்கரவாத அமைப்பு தொடர்பான அனைத்து வழக்கு ஆவணங்களையும் என்.ஐ.ஏ. கைப்பற்றும்.

## திருப்புவனம் அருகே நடந்த பரிதாபம்

# போலீஸ் வாகனம் மோதி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் பலி: உறவினர்கள் சாலை மறியல்

**மதுரை, நவ. 12–**

**திருப்புவனம் அருகே போலீஸ் வாகனம் மோதி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் பலியான சம்பவத்தில் காவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி உறவினர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.**

மதுரை அருகே சிட்டம்பட்டியை சேர்ந்தவர் பிரசாத்(வயது 26). இவருடைய மனைவி சத்யா(23). இவர்களுடைய 3 வயது குழந்தை அஸ்வின்.

நேற்று தனது மனைவி, குழந்தையுடன் அனஞ்சியூர் கிராமத்தில் துக்க நிகழ்ச்சிக்கு பிரசாத் மோட்டார் சைக்கிளில் சென்றார். பின்னர் அங்கிருந்து அண்ணி சோனை ஈஸ்வரியை (40) அழைத்துக்கொண்டு 4 பேராக மோட்டார் சைக்கிளில் திருப்புவனம் அருகே உள்ள சிட்டம்பட்டி நோக்கி வந்து கொண்டு இருந்தனர்.

பூவந்தி அருகே அஞ்சுயூர் விலக்கு பகுதியில் வந்தபோது அப்பகுதியில் போலீஸ் வாகனம் ஒன்று வந்தது. அந்த வாகனமும், மோட்டார் சைக்கிளும் எதிர்பாராதவிதமாக மோதிக்கொண்டன. இதில் மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த பிரசாத், அவருடைய மனைவி சத்யா, குழந்தை அஸ்வின் ஆகியோர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தனர். படுகாயம் அடைந்த பெண் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மதுரை அரசு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

இந்த போலீஸ் வாகனத்தில் ராமநாதபுரத்தை சேர்ந்த பெண் இன்ஸ்பெக்டர் ஒருவர் வந்துள்ளார். ஏட்டு பாலமுருகன் என்பவர் அந்த வாகனத்தை ஓட்டி வந்தார். இவர்கள் மதுரை வந்துவிட்டு திரும்பிச்சென்றபோது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே சம்பவம் பற்றி அறிந்ததும் அந்த பகுதி மக்கள் மற்றும் உறவினர்கள் போலீஸ் வாகன டிரைவரை கைது செய்யக்கோரியும், அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் உடல்களை வாங்க மறுத்து மறியலில் ஈடுபட்டனர்.

இதனால் அந்த வழியே போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இது குறித்து தகவல் அறிந்ததும் சிவகங்கை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சிவபிரசாத் விரைந்து வந்து மறியலில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். விபத்து குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி

# டிசம்பர் 16ந் தேதி முதல் காலவரையற்ற காத்திருப்பு போராட்டம்: டாஸ்மாக் பணியாளர்கள் அறிவிப்பு

**சென்னை, நவ. 12–**

**பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளைவலியுறுத்திடிசம்பர் 16ந் தேதி முதல் காலவரையற்ற காத்திருப்பு போராட்டம் நடத்தப்படும் என்று மாநில செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர் சங்கத்தின் (ஏஐடியூசி) மாநில செயற்குழுக் கூட்டம் சென்னை, சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள தமிழ்நாடு ஏஐடியூசி அலுவலகத்தில், சங்கத் தலைவர் நா. பெரியசாமி முன்னாள் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் தமிழ்நாடு ஏஐடியூசி பொதுச் செயலாளர் எம். இராதாகிருஷ்ணன், டாஸ்மாக் பணியாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த தனசேகரன், பொருளாளர் கே. கோவிந்தராஜ், துணைத் தலைவர்கள் மதுரை எஸ். பாலசந்திரன், திருச்சி ராயப்பன், செயலாளர்கள் எம். செல்வம், சி. மாரி, ஆர் . இளங்கோ, பி. எம். மணிகண்டன், திண்டுக்கல் ஆர் மணிகண்டன் உள்ளிட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

டாஸ்மாக் பணியாளர்களின் கோரிக்கைகள் மீது தமிழ்நாடு அரசும், நிர்வாகமும் திறந்த மனதுடன் நேர்மறை அணுகுமுறையோடு பேசி தீர்வு காண வேண்டும் என மாநில செயற்குழுக் கூட்டம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது. பணி நிரந்தரம், காலமுறை ஊதியம், ஓய்வூதியம் உள்ளிட்ட கோரிக்கைகள் சட்டபூர்வமாக தமிழ்நாடு அரசு நிறைவேற்ற வேண்டிய கோரிக்கைகளாகும். ஆனால், டாஸ்மாக் நிர்வாகம் அந்தக் கோரிக்கைகள் அரசு கொள்கை முடிவு எடுத்து, ஒப்புதல் தர வேண்டிய கோரிக்கைகள் என்று தொடர்ந்து கூறி வருவதால், டாஸ்மாக் பணியாளர்களின் பணி நிரந்தரம், காலமுறை ஊதியம், ஓய்வூதியம் உள்ளிட்ட கோரிக்கைகள் மீது தமிழ்நாடு அரசு கொள்கை முடிவு எடுக்க வேண்டும் என வலியுறுத்தி, டிசம்பர் 16–ந் தேதி முதல், சங்கத்தின் தலைவர்நா.பெரியசாமிதலைமையில், மேலாண்மை இயக்குநர் அலுவலகம் முன்பாக கூடி பேரணியாக சென்று, அரசின் தலைமைச் செயலகம் முன்பாக காலவரையற்ற காத்திருப்புப் போராட்டத்தை மேற்கொள்வது என்று சங்கத்தின் மாநில செயற்குழு ஒரு மனதாக முடிவு செய்துள்ளது.

அனைத்துப் பணியாளர்களும் காலவரையற்ற காத்திருப்புப் போராட்டத்தில் பங்கேற்று, கோரிக்கைகள் வெற்றி பெற ஆதரவும், ஒத்துழைப்பும் வழங்குமாறு பணியாளர்கள் அனைவரையும் மாநில செயற்குழுக் கூட்டம் கேட்டுக் கொண்டது.

# ஜப்பானில் அரிசி கிலோ ரூ.12,500; சாதிக்க தயாராகும் மரபும் புதுமையும் இணைந்த தமிழ்நாடு!




அரிசி என்பது மனித வாழ்வின் அடிப்படை அத்தியாவசியம், அது வெறும் உணவுப் பொருள் அல்ல, பண்பாட்டின், பாசத்தின், நன்றியுணர்வின் அடையாளம். பண்டைய இந்திய ஞானிகள் "அன்னம் பரபிரம்மம்" என்று கூறியபோல், தமிழர்களும் அரிசியை தெய்வீக பொருளாக வணங்கி வந்துள்ளனர்.

புராணங்களில் நெல் பூமித் தாயின் பிள்ளையாக வர்ணிக்கப்படுகிறது; தாய் அன்னபூரணி உணவின் தெய்வமாக போற்றப்படுவது, அரிசியின் தத்துவம் மனித வாழ்க்கையின் மையமாக இருந்ததற்கான சான்று. திருமண விழா முதல் மரணத்திற்கு பின் இறுதி நிகழ்வுகள் வரை, அரிசி தமிழர் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும் இடம்பிடித்துள்ளது.

சங்க இலக்கியங்களில் நெல் மற்றும் அரிசி பற்றிய சான்றுகள் தெளிவாகக் காணப்படுகின்றன. புறநானூறு, அகநானூறு போன்ற நூல்களில் நெல் வயல்கள், அறுவடை விழாக்கள், வேளாண் நுட்பங்கள் பற்றிய விரிவான விளக்கங்கள் உள்ளன. அறுவடை நன்றி விழா, "பொங்கல்", அரிசிக்கான தமிழரின் நன்றியுணர்வின் வடிவமாக இன்று வரை தொடர்கிறது.

### தமிழனின் வேளாண் தத்துவம்

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மதுரை, கடலூர் போன்ற மாவட்டங்கள் "அரிசி நாடு"களாக அறியப்படுகின்றன. காவிரி ஆற்றின் வளம் "தஞ்சாவூர் டெல்டா"வை தமிழ்நாட்டின் "அன்ன பானை"யாக உயர்த்தியுள்ளது. "அரிசி தெய்வம், விவசாயி தெய்வம்" இதுவே தமிழனின் உயர்ந்த வேளாண் தத்துவம்.

இன்றைய காலகட்டத்திலும் தமிழ்நாடு இந்தியாவின் முன்னணி நெல் உற்பத்தி மாநிலமாக திகழ்கிறது. நவீன பாசன முறைகள், உயர் விளைச்சல் தரும் விதைகள், அரசு ஆதரவான கொள்முதல் திட்டங்கள் ஆகியவை தமிழ்நாட்டின் வேளாண் பொருளாதாரத்தை வலுப்படுத்தி வருகின்றன.

"பசுமை தமிழகம்" போன்ற திட்டங்கள் இயற்கை மற்றும் கரிம வேளாண்மைக்கு ஊக்கம் அளிக்கின்றன. இதன் மூலம் மாப்பிள்ளை சம்பா, கருப்பு கவுனி, குள்ளக்கார் போன்ற பாரம்பரிய அரிசி வகைகள் மீண்டும் உயிர் பெறுகின்றன.

தமிழ்நாடு அரிசி ஆராய்ச்சியில் இந்திய அளவில் முன்னணியில் உள்ளது. குறைந்த தண்ணீரில் கூட அதிக விளைச்சல் தரும், ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து நிறைந்த ரகங்களை உருவாக்கும் ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

### ஜப்பானின் முன்னேற்றம்

ஜப்பானில் டொயோ ரைஸ் கார்ப்பரேஷன் நிறுவனம் உருவாக்கிய "கிண்டேம் பிரீமியம்" (Kinmemai Premium) என்ற அரிசி வகை, உலகில் அதிக விலைக்கு விற்கப்படும் அரிசியாக கின்னஸ் சாதனையில் இடம்பிடித்துள்ளது.

ஒரு கிலோ அரிசி ரூ. 12,500 என்ற விலையில் விற்பனையாகிறது. 2016இல் அறிமுகமான இது, கிபு, குமாமோடோ, நிகாட்டா உள்ளிட்ட பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்ட சிறந்த வகைகளை கலந்ததாகும். மெழுகுப் பூச்சு நீக்கப்பட்டு, நார்ச்சத்து அதிகரிக்கப்பட்டதால், இது நீரிழிவு நோய் மற்றும் உடல் பருமனைக் கட்டுப்படுத்தும் திறன் பெற்றதாக கூறப்படுகிறது. இந்த அரிசி ஆரோக்கியம், சத்துத்தன்மை, சுத்தம் ஆகியவற்றின் இணைப்பாக இருப்பதால், உலகளாவிய உணவுப் பிராண்டாக மாறியுள்ளது.

சுகாதாரப் பலன்கள்: இதில் அதிக நார்ச்சத்தும், சர்க்கரை சத்து குறைவாகவும் இருப்பதால், நீரிழிவு நோய் மற்றும் உடல் பருமன் போன்ற நோய்களிலிருந்து பாதுகாக்கும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது என கூறப்படுகிறது.

### அதிக விலைக்கான காரணம்:

இதுவரை சந்தையில் விற்கப்படும் அரிசிகளிலேயே, இந்த அரிசிதான் மிகவும் தூய்மையான முறையில் தயாரிக்கப்படுவதாகவும், அதிக சத்துக்களைக் கொண்டுள்ளதாலும் இதற்கு இவ்வளவு விலை என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த அரிசி தற்போது ஜப்பான், சிங்கப்பூர் போன்ற நாடுகளில் மட்டுமே கிடைக்கிறது.

### "பிரீமியம் தமிழ் அரிசி"

ஜப்பானின் "கிண்டேம் பிரீமியம்" அரிசி ஒரு முக்கியமான பாடத்தை சொல்கிறது... பாரம்பரியத்தையும் அறிவியலையும் இணைத்தால், ஒரு சாதாரண தானியத்தையும் உலக சந்தையில் பிரீமியம் பிராண்டாக மாற்றலாம்.

தமிழ்நாட்டில் இதற்கான அனைத்து அடித்தளங்களும் ஏற்கனவே உள்ளன. மரபு நெல் ரகங்களின் வளமான மரபு, மேம்பட்ட வேளாண் அறிவு, அரசு ஆதரவு, கரிம வேளாண்மை மீதான மக்களின் ஆர்வம். இவற்றை ஒருங்கிணைத்து, "பிரீமியம் தமிழ் அரிசி" என்ற பெயரில் உலக சந்தையில் தமிழ்நாடும் தன் ரகங்களை அறிமுகப்படுத்தக்கூடும். ஆரோக்கியம், ஊட்டச்சத்து, நீரிழிவு நோய் கட்டுப்பாடு போன்ற அம்சங்களை மையமாகக் கொண்ட அரிசி வகைகளுக்கு உலகளாவிய தேவை அதிகரித்து வருகிறது.

ஒருகாலத்தில் நம் நாட்டின் அடையாளமாக இருந்த "பொங்கப் பானை", இன்று உலக உணவுக் களத்தில் மீண்டும் ஒளிரும் நேரம் வந்துவிட்டது. தமிழ்நாடு தனது மரபையும் நவீன அறிவியலையும் இணைத்து, உலகத்தின் பசியை மட்டுமல்ல, அதன் ஆரோக்கியத்தையும் பூர்த்தி செய்யும் "அட்சய பாத்திரம்" ஆக உயர்வதே நமது லட்சியமாக இருக்க வேண்டும்.

---

**தொடர்ந்து பாலியல் வன்கொடுமை; போதைப்பொருள், சட்டம் ஒழுங்கு சீர்குலைவு**

# தி.மு.க. அரசைக் கண்டித்து திண்டிவனத்தில் 14–ந் தேதி அ.தி.மு.க. ஆர்ப்பாட்டம்

**எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு**

சென்னை, நவ.12–

**தமிழ்நாட்டில் பெருகிவரும் பாலியல் வன்கொடுமை, போதைப்பொருள் கலாச்சாரம், சட்டம் ஒழுங்கு சீர்கேடுகள் மற்றும் திண்டிவனத்தில் நிகழ்ந்த பாலியல் சீண்டல் என தொடர்ந்து நடைபெற்று வரும் மகளிர் விரோத, மக்கள் விரோதச் செயல்களை கட்டுப்படுத்தத் தவறிய தி.மு.க. அரசைக் கண்டித்து விழுப்புரம் மாவட்ட அண்ணா தி.மு.க. மற்றும் மாவட்ட மகளிர் அணியின் சார்பில் 14–ந் தேதி வெள்ளிக்கிழமை திண்டிவனம் காந்தி சிலை அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:–

தமிழ்நாட்டில் ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு பொறுப்பேற்றது முதலே பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் எதிரான பாலியல் வன்கொடுமைகள் தொடர்கதையாகிவிட்டன. பெண்களை பல்வேறு வகைகளில் பாதுகாக்கும் மாநிலமாகத் திகழ்ந்த தமிழ்நாட்டை, பெண்கள் வெளியில் நடமாடவே அச்சப்படும் அளவிற்கு, ஸ்டாலின் ஆட்சியில் சட்டம் ஒழுங்கு அடியோடு சீர்கெட்டுள்ளது.

திமுக ஆட்சியில் பெண்களுக்கு எதிராக நடைபெற்று வரும் பாலியல் வன்கொடுமைகள்; போதைப் பொருட்கள் புழக்கம் மற்றும் கடத்தல்; சட்டம் ஒழுங்கு சீர்கேடுகள்; சிறார்கள், இளைஞர்கள் போதையின் பிடியில் சிக்கி குற்றச் செயல்களில் ஈடுபடுவது போன்ற மக்கள் விரோதச் செயல்கள் நடைபெற்று வருவது தொடர்கதையாகிவிட்டது.

### அலங்கோலம்

குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் சட்டத்தின் மீதோ, காவல் துறையின் மீதோ எவ்வித அச்சமும் இன்றி செயல்படுகின்றனர். இந்த ஆட்சி தமிழ்நாட்டை அலங்கோல நிலைக்கு தள்ளிவிட்டதன் அடையாளம் தான் இதுபோன்ற நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

திமுக அரசு பொறுப்பேற்ற நாள் முதலே தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு குழிதோண்டிப் புதைக்கப்பட்டு விட்டது. தமிழகத்தில் தொடரும் சட்டம்ஒழுங்கு சீர்கேடுகள் குறித்தும்; பெண்களுக்கு எதிராக நடைபெற்று வரும் பாலியல் வன்கொடுமைகள்; பெருகி வரும் போதைப் பொருள் புழக்கம் குறித்தும் அறிக்கைகள் வாயிலாகவும், ஊடகப் பேட்டிகள் வாயிலாகவும், சட்டமன்றத்திலும் தொடர்ச்சியாகத் தெரிவித்து, உரிய நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி வந்தும், இதுவரை திமுக அரசு எந்தவித ஆக்கப்பூர்வமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

கரும்புள்ளி

அதேபோல், ஸ்டாலின் ஆட்சியில், மக்களின் பல்வேறு அத்தியாவசிய, அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித் தருவதில் எவ்வித அக்கறையும் காட்டுவதில்லை. மாறாக, பல்வேறு வரி உயர்வுகளை மக்கள் தலையில் சுமத்தி உள்ளது. அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்துவிட்டது. இதன் காரணமாக மக்கள் தங்கள் வாழ்க்கையை நடத்த முடியாமல் விழிபிதுங்கி நிற்கின்றனர்.

சமீபத்தில், கோயம்புத்தூரில் கல்லூரி மாணவி ஒருவருக்கு எதிராக நடைபெற்ற கூட்டுப் பாலியல் வன்கொடுமை. அதேபோல், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் அருகே பள்ளி மாணவியிடம் காவலர் ஒருவர் பாலியல் சீண்டல் என, தமிழ்நாட்டின் வரலாற்றில் திமுக வின் ஆட்சிக் காலம் ஒரு கரும்புள்ளி என்பதை இதுபோன்ற நிகழ்வுகள் மீண்டும் மீண்டும் மெய்ப்பித்து வருகின்றன.

### கண்டன ஆர்ப்பாட்டம்

இந்நிலையில், தமிழ்நாட்டில் பெருகிவரும் பாலியல் வன்கொடுமை, போதைப் பொருள் கலாச்சாரம், சட்டம்ஒழுங்கு சீர்கேடுகள் மற்றும் திண்டிவனத்தில் நிகழ்ந்த பாலியல் சீண்டல் என தொடர்ந்து நடைபெற்று வரும் மகளிர் விரோத, மக்கள் விரோதச் செயல்களை கட்டுப்படுத்தத் தவறிய ஸ்டாலின் அரசைக் கண்டித்து, அண்ணா தி.மு.க. விழுப்புரம் மாவட்டக் கழகம் மற்றும் மாவட்ட மகளிர் அணியின் சார்பில், 14–ந் தேதி வெள்ளிக் கிழமை காலை 10 மணியளவில், திண்டிவனம் காந்தி சிலை அருகில், கழக அமைப்புச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சி.வி. சண்முகம் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில், விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த தலைமைக் கழகச் செயலாளர், கழக சட்டமன்ற உறுப்பினர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டத்தில் பல்வேறு நிலைகளில் பணியாற்றி வரும் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் இந்நாள், முன்னாள் பிரதிநிதிகள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் முன்னாள் பிரதிநிதிகளும், கழக உடன்பிறப்புகளும் பெருந்திரளாகக் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில், பெருந்திரளான மகளிர் உள்ளிட்ட பொதுமக்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

---

## தங்கம் விலை ரூ.800 குறைவு: ஒரு சவரன் ரூ.92,800

*சென்னை, நவ.12–*

*சென்னையில் ஆபரணத் தங்கம் இன்று சவரனுக்கு ரூ.800 குறைந்து ரூ.92,800க்கு விற்பனையாகிறது.*

*சர்வதேச நிலவரங்களால் ஜெட் வேகத்தில் தங்கம் விலை உயர்ந்து வருகிறது. சமீபகாலமாக தங்கம் விலை காலை, மாலை என இரண்டு முறை உயர்ந்து வருகிறது. நேற்று முன் தினம் காலை, மாலை என ஒரே நாளில் சவரனுக்கு ரூ.1,440 உயா்ந்து ரூ.91,840க்கு விற்பனையானது. தொடா்ந்து நேற்று தங்கம் விலை மீண்டும் அதிரடியாக கிராமுக்கு ரூ.200 உயர்ந்து ரூ.11,700க்கும், சவரனுக்கு ரூ.1,760 உயா்ந்து ரூ.93,600க்கும் விற்பனையானது. இதன் மூலம் தங்கம் விலை கடந்த 2 நாள்களில் சவரனுக்கு ரூ.3,160 உயா்ந்தது.*

*இந்த நிலையில் சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று சவரனுக்கு ரூ.800 குறைந்து,*

*ரூ.92,800க்கும், கிராமுக்கு ரூ.100 குறைந்து ரூ.11,600க்கும் விற்பனையாகிறது. வெள்ளி விலை அதிரடியாக உயர்ந்துள்ளது. வெள்ளி கிராமுக்கு ரூ.3 உயா்ந்து ரூ.173க்கும், ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ.3,000 உயா்ந்து ரூ.1.73 லட்சத்துக்கும் விற்பனையாகிறது.*

---

**ஹாஸ்டல்கள் வணிகக் கட்டடங்கள் அல்ல**

# மாணவர்கள், பணிபுரியும் ஆண், பெண் தங்கும் விடுதிகளுக்கு வணிகக் கட்டட சொத்து வரி கூடாது: ரத்து செய்த ஐகோர்ட்

*சென்னை, நவ.12*

*ஹாஸ்டல்கள், வணிக கட்டடங்கள் அல்ல எனத் தெரிவித்த சென்னை உயர் நீதிமன்றம், அவற்றுக்கு வணிக கட்டிடங்களுக்கான சொத்து வரி செலுத்த வேண்டும் என சென்னை, கோவை மாநகராட்சி சார்பில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை ரத்து செய்து உத்தரவிட்டுள்ளது.*

*மாணவ, மாணவிகள் மற்றும் வேலைக்கு செல்லும் ஆண்கள், பெண்களுக்கான தங்கும் விடுதி களுக்கான சொத்து வரி, மின்சார கட்டணம் மற்றும் தண்ணீர் வரி ஆகியவற்றின் பயன்பாட்டுக்கு ஏற்ப, ஹாஸ்டல்கள் 2024-25ஆம் ஆண்டுக்கான வணிக கட்டடங் களுக்கான சொத்து வரியை செலுத்த வேண்டும் என கூறி, சென்னை, கோவை மாநகராட்சிகளின் சார்பில் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.*

*இந்த உத்தரவுகளை ரத்து செய்யக் கோரி, ஹாஸ்டல் உரிமையாளர்கள் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்குகளை, நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி விசாரித்தார். அப்போது, மனுதாரர்கள் தரப்பில், ஆஜரான வழக்குரைஞர் அபர்ணா நந்தகுமார், வணிக கட்டடங்களுக்கான சொத்து வரியை விதித்தால், அதை, ஆஸ்டலில் தங்குவோரிடம் தான் வசூலிக்க வேண்டியிருக்கும் என வாதிட்டார்.*

### ரத்து செய்து உத்தரவு

*இந்த வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிபதி, தனியாக வாடகைக்கு வீடு எடுத்து தங்கும் நிலையில் இல்லாதவர்கள் தான் ஹாஸ்டல்களில் தங்குகின்றனர். அதனால், ஹாஸ்டல்கள், குடியிருப்பு கட்டடங்கள் தானே தவிர, லாப நோக்கத்தோடு செயல்படும் வணிக கட்டடங்களாக கருத முடியாது. விடுதி என்பது குடியிருப்பு என்ற வகையில்தான் வரும் என 2023 ஆம் ஆண்டு அளித்த தீர்ப்பையே இந்த வழக்குக்கும் பின்பற்ற முடியும் எனக் கூறி, வணிக கட்டடங்களுக்கான சொத்து வரியை செலுத்த பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை ரத்து செய்து உத்தரவிட்டார்.*

*மேலும், ஹாஸ்டல்களுக்கு குடியிருப்புக் கட்டடங்களுக்கான வரியை மட்டுமே வசூலிக்க வேண்டும். அதேநேரம் இந்த உத்தரவு இந்த வழக்குகளுக்கு மட்டுமே பொருந்தும். அனைத்து வகையான விடுதிகளுக்கும் கண்ணை மூடிக்கொண்டு இந்த உத்தரவை அமல்படுத்தக்கூடாது. அந்த ஹாஸ்டல்களில் சேவை வழங்கப்படுகிறதா? என்பதை பார்த்த பின்னரே அதிகாரிகள் வரிகள் வேண்டும் எனவும் நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி தெரிவித்தார்.*

---

## சிறுகதை — டைகர் வரதாச்சாரியார் சாலை...! (சாலை 55)

**ராஜா செல்லமுத்து**

"கவிஞர் வைரமுத்து வீடு எங்க இருக்கு?" "கோடம்பாக்கத்தில டிரஸ்ட்புரத்தில இருக்கு.

"இல்லங்க இப்ப அவரு பெசன்ட் நகர்ல குடியிருக்காரு", "அப்படியா? முகவரி சொல்ல முடியுமா? என்று கவிஞரின் வீட்டு முகவரியைக் கேட்டுக் கொண்டிருந்தான், திவாகரன்.

" சார் பெசன்ட் நகர், சர்ச்சுக்கு முன்னாடி வலதுகைப் பக்கம் திரும்பினா டைகர் வரதாச்சாரி சாலை அப்படின்னு ஒன்னு இருக்கும். அங்க போயிட்டு திரும்புன உடனே தமிழ், வைரமுத்து இப்படி இரண்டு வார்த்தைகள் வீட்டுக்கு முன்னாடி இருக்கிற சுவர்ல இடது, வலதுன்னு எழுதியிருக்கும். நீங்க யாரையும் கேட்கணும்னு அவசியம் இல்ல. அங்க போனா நீங்க கவிஞரைப் பார்க்கலாம் என்று அக்கறை உள்ள மனிதன் திவாகரனிடம் சொல்ல,

"ரொம்ப நன்றி" என்று கவிஞர் வைரமுத்து வீட்டிற்குக் கிளம்பினான், திவாகரன்.

பெசன்ட் நகர் வரதாச்சாரியார் சாலை செல்வதற்காக ஒரு வாடகைக் காரை முன்பதிவு செய்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் நின்று கொண்டிருந்த இடத்திற்கு கார் வந்து நின்றது. காரில் ஏறிய திவாகரனிடம் ஓடிபி நம்பர் கேட்டான், கார் டிரைவர், ஓடிபி நம்பரை திவாகரன் சொல்ல, கவிஞரின் வீட்டு முகவரியான டைகர் வரதாச்சாரியார் சாலைக்கு வேகம் எடுத்தது, கார்.

கவிஞர் வைரமுத்து தமிழ்த்திரை உலகின் சிறந்த பாடலாசிரியர். அவரைச் சந்திப்பதற்குச் செல்கிறோம், முன்அனுமதி எதுவும் இல்லை, சந்திக்க அனுமதிப்பார்களா – மாட்டார்களா? என்ற குழப்பம் திவாகரனுக்குள் எழுந்தது.

'சரி அனுமதி கிடைத்தால் பார்ப்போம். இல்லை என்றால் திரும்பி வருவோம். பெசன்ட் நகர் கலாஷேத்ரா காலனி, ராஜராஜன் தெருவில் தான் கவிவேந்தர் மு.மேத்தா இருக்கிறார்: நடிகர் விக்ரம் இருக்கிறார்' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான் திவாகரன்.

'தமிழ், தமிழ் என்று சொல்லிக் கொண்டிருக்கும் கவிஞர் வசிக்கும் சாலையின் பெயர் தமிழில் இல்லையே? டைகர் வரதாச்சாரியார் அப்படிங்கிற பெயருக்கு என்ன அர்த்தம்? டைகர்ன்னா என்ன?' என்று தன்னிடம் இருந்த மடிக்கணினியை எடுத்து, 'டைகர் வரதாச்சாரியார் சாலை என்றால் என்ன? யார் இந்த டைகர் வரதாச்சாரி' என்று ஆராய ஆரம்பித்தான்.




புகழ் பெற்ற சமூக சீர்திருத்தவாதியும் இந்திய சுதந்திரப் போராட்ட வீரருமான தியோசோபிகல் சொசைட்டியின் தலைவருமான அன்னி பெசன்ட் அம்மையாரின் நினைவாய் அவரின் பெயரில் தான் பெசன்ட் நகர் என்ற பெயர் வைக்கப்பட்டது.

1882–ம் ஆண்டு, தியோசாபிகல் சொசைட்டியின் தலைமையகம் அடையாறுக்கு மாற்றப்பட்டது. அந்தப் பகுதிகள் எல்லாம் அடர்ந்த வனப்பகுதியாகவே இருந்தன. பெசன்ட் நகரைச் சுற்றிச் சோழர் காலத் தொடர்புகள், பனை மரங்கள், தாவரங்கள் நிறைந்த மணல் பகுதியாகவே இருந்தன. கடற்கரை ஓரமாய் மீன்பிடிக்கும் மீனவர்கள் குடும்பம் அதிகமாக இருந்தன. பெசன்ட் நகர் கடற்கரை, மெட்ராஸின் முன்னாள் ஆளுநர் எட்வர்ட் எலியட்டின் பெயரால், எலியட்ஸ் கடற்கரை என்று அழைப்படுகிறது. இந்தக் கடற்கரையை ஆங்கில நிர்வாகிகள், பிரபுக்கள் ஓய்வெடுக்கவும் நீந்தவும் பயன்படுத்தினர், என்று பெசன்ட் நகர் பற்றிய வரலாற்றை வாசித்து முடித்த பிறகு, டைகர் வரதாச்சாரியார் சாலையைப் பற்றி வாசிக்க ஆரம்பித்தான், திவாகரன்.

டைகர் வரதாச்சாரியார் ஒரு கர்நாடக இசை வித்துவான். 1876–ம் ஆண்டு செங்கல்பட்டு மாவட்டம் கொளத்தூர் கிராமத்தில் பிறந்தவர். இளம் வயதிலேயே இசை மீதான ஆர்வம் காரணமாக தனது சகோதர்களிடமிருந்தே ஆரம்ப கால இசையைப் பயின்றார். அதற்கு பிறகு தன் 14வது வயதில் திருவையாறில் உள்ள குருகுலத்தில் கர்நாடக வித்துவான் பட்டினம் சுப்பராமையரிடம் பயிற்சி பெற்றார்.

மைசூர் அரசவையில் தனது இசைத்திறமையை வெளிப்படுத்தி மைசூர் மகாராஜா கிருஷ்ணராஜ உடையாரிடம் இருந்து 'டைகர்' பட்டத்தை பெற்றவர். இவரது குரல் கம்பீர ஆளுமையை இந்த 'டைகர்' என்ற பட்டம் குறிக்கிறது. வரதாச்சாரியார் மைசூர் அரண்மனைக்குள் நுழைவதற்கு முன்பு கர்நாடக இசையானது ஆலயங்கள் மற்றும் உற்சவங்களில் மட்டுமே பாடப்பட்டு வந்தது.

அவரது காலத்தில் இசை சபாக்களின் வருகை வியாபாரமாக இருந்ததால் வரதாச்சாரியார் தனது தனித்துவமான குரலால் இந்த மாற்றங்களில் தனி இடத்தைப் பிடித்தார். 1936–ம் ஆண்டு, ருக்மணி அருண்டேல் அவர்களால் ஆரம்பத்தில் ஒரு மாணவியுடன் ஆரம்பிக்கப்பட்ட கலாச்ஷேத்ரா அகாடமி, பின் வளர்ச்சியடைந்தது. அந்தக் கலாஷேத்ரா அகாடமியில் தலைமை ஆசிரியராக டைகர் வரதாச்சாரியார் பணிபுரிந்த போது, பல மாணவர்களுக்கு குருகுல முறையில் இசை கற்பித்தார்.

தனது மாணவர்களுக்கு இசையை ஒரு புனிதமானக் கலையின் நுணுக்கமாகச் சொல்லிக் கொடுத்தார். மைசூர் மகாராஜா நான்காம் கிருஷ்ணராஜ உடையாரின் அரசவை இசைக் கலைஞராகவும் பணிபுரிந்துள்ளார். இவரின் கம்பீரமான இசைப் பணியைக் கண்டு மைசூர் மகாராஜா தான் டைகர் என்ற பட்டத்தை வழங்கினார். 1932–ம் ஆண்டு மியூசிக் அகாடமி இவருக்கு சங்கீத கலாநிதி விருதை வழங்கியது. டைகர் வரதாச்சாரியார் நீண்ட காலமாக பெசன்ட் நகர் பகுதியிலே வாழ்ந்து வந்தார்.

1970களில் முற்பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பெசன்ட் நகரை ஒரு குடியிருப்பு பகுதியாக உருவாக்கியது. அது ஒரு திட்டமிடப்பட்ட நகர வளர்ச்சியாக இருந்தது. தொடக்கத்தில் இந்தப் பகுதியில் வீடுகள் குறைவாக இருந்தன. இங்கு குடியிருந்தவர்கள் கடலில் இருந்து வீசும் காற்றை அனுபவித்து அமைதியான சூழலில் வாழ்ந்து வந்தார்கள். சாலைகள், பூங்காக்கள் டைகர் வரதாச்சாரியார் சாலையில் நிறைய இருக்கின்றன. இந்தச் சாலை பெசன்ட் நகரில் உள்ள ஒரு முக்கியமான சாலையாகும். இப்படிப்பட்ட ஒரு கர்நாடக இசை மேதையின் பெயரைத் தான் இந்தச் சாலைக்கு டைகர் வரதாச்சாரியார் சாலை என்று வைத்திருக்கிறார்கள் என்று பயணத்தின் போதே வாசித்துத் தெரிந்து கொண்டான், திவாகரன்.

அவன் சென்ற கார் இப்போது பெசன்ட் நகர் பகுதிக்குள் வந்தது. இந்தச் சாலையில் கலாஷேத்ரா காலனி, வெல்ஃபர் அசோசியேசன் போன்ற அமைப்புகள் இந்தச் சாலையில் உள்ள குடியிருப்பு மேம்பாடுகளுக்கு பணியாற்றுகின்றன. பெசன்ட் நகர் சென்னையில் உள்ள வசதி படைத்த மக்கள் வசிக்கும் பகுதியாக இருக்கிறது. இங்கு கடற்கரை உணவகங்கள். காபிக் கடைகள் நிறைய உள்ளன என்று பெசன்ட் நகர் பற்றிய அத்தனை தகவல்களையும் படித்த திவாகரன் கலாஷேத்ரா காலனிக்குள் நுழைந்து டைகர் வரதாச்சாரியார் சாலையை அடைந்தான். பூங்காவை ஒட்டிய ஒரு இல்லத்தில், தமிழ், வைரமுத்து என்ற பெயர்ப் பலகையைப் பார்த்து இதுதான் கவிஞர் வைரமுத்து வீடு என்பதை அறிந்து கொண்டான்.

முன் அனுமதி இல்லாமல் செல்கிறோம். நம்மை வீட்டிற்குள் விடுவார்களா – மாட்டார்களா? என்ற வருத்தம் அவனுக்குள் மேலோங்கி இருந்தது. முன் அனுமதியில்லாமல் செல்வது முறையல்ல . சரி, கவிஞரை இன்னொரு நாள் சந்தித்துக் கொள்ளலாம். அவர் வசிக்கும் பெசன்ட் நகரின் வரலாறு, கலாஷேத்ரா காலனியில் உள்ள டைகர் வரதாச்சாரியார் சாலையைப் பற்றியும் அறிந்து கொண்டோம். பாடலாசிரியர் வைரமுத்து இசையாசிரியர் டைகர் வரதாச்சாரியார் சாலையில் வசிப்பது ஆச்சரியம் இல்லை. பாடலுக்கும் இசைக்கும் சம்மந்தம் இருக்கிறது என்பதைக் கவிஞர் வைரமுத்து வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த இல்லம் உறுதி செய்கிறது.

ஆனால் என்ன ? தமிழ் என்று வீட்டு வாசலில் எழுதியிருக்கிறார். சாலை தான் டைகர் வரதாச்சாரியார் சாலை என்று ஆங்கிலத்தில் இருக்கிறது. இது நல்ல முரண்பாடு என்று நினைத்துக் கொண்டே தன் காரிலிருந்து இறங்காமல் பெசன்ட் நகர் கடற்கரைக்குச் சென்று குளிரும் அலைக் காற்றை வாங்கிக் கொண்டிருந்தான் திவாகரன். கடல் அலைகள், கவிதையாய் கரையை நோக்கி வந்து கொண்டிருந்தன.

---

# ரஞ்சி கிரிக்கெட்: ஜம்–முகாஷ்மீர் அணியிடம் முதல்முறையாக தோல்வி அடைந்த டெல்லி

**புதுடெல்லி, நவ.12**

**ரஞ்சி கோப்பை கிரிக்கெட்டில் டெல்லி அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் முதல்முறையாக ஜம்முகாஷ்மீரிடம் தோல்வி அடைந்தது.**

*91வது ரஞ்சி கோப்பை கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதன் 'எலைட்' பிரிவில் பங்கேற்றுள்ள 32 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டு லீக்கில் மோதுகின்றன.*

*இதில் டெல்லியில் உள்ள அருண்ஜெட்லி ஸ்டேடியத்தில் நடந்த ஆட்டம் ஒன்றில் (டி பிரிவு) டெல்லி – ஜம்மு காஷ்மீர் அணிகள் மோதின. முதல் இன்னிங்சில் முறையே டெல்லி 211 ரன்னும், ஜம்முகாஷ்மீர் 310 ரன்னும் எடுத்தன. 99 ரன் பின்தங்கிய நிலையில் 2வது இன்னிங்சை ஆடிய டெல்லி அணி 277 ரன்னில் அடங்கியதால் ஜம்முகாஷ்மீருக்கு 179 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இந்த இலக்கை நோக்கி ஆடிய ஜம்முகாஷ்மீர் அணி 3வது நாள் முடிவில் 2 விக்கெட்டுக்கு 55 ரன்கள் எடுத்திருந்தது.*

*இந்த நிலையில் 4வது மற்றும் கடைசி நாளான நேற்று தொடர்ந்து பேட் செய்த காஷ்மீர் வீரர் வன்ஷஜ் ஷர்மா 8 ரன்னில் அவுட் ஆனார். இதைத்தொடர்ந்து கேப்டன் பராஸ் டோக்ரா, தொடக்க ஆட்டக்காரர் கம்ரான் இக்பாலுடன் கைகோர்த்தார். நிலைத்து நின்று நேர்த்தியாக ஆடிய கம்ரான் இக்பால் சதம் அடித்ததுடன் அணியை சரித்திர வெற்றிக்கு அழைத்து சென்றார். ஜம்முகாஷ்மீர் அணி 43.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்கு 179 ரன்கள் சேர்த்து 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. கம்ரான் இக்பால் 133 ரன்களுடனும் (147 பந்து, 20 பவுண்டரி) பராஸ் டோக்ரா 10 ரன்னுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். 65 ஆண்டுகளாக ரஞ்சி கிரிக்கெட்டில் விளையாடி வரும் ஜம்முகாஷ்மீர் அணி, 7 முறை சாம்பியனான டெல்லியை வீழ்த்துவது இதுவே முதல்முறையாகும்.*

*நாக்பூரில் நடந்த நடப்பு சாம்பியன் விதர்பா அணிக்கு எதிரான ஆட்டத்தில் (ஏ பிரிவு) 345 ரன் இலக்கை நோக்கி கடைசி நாளில் 2வது இன்னிங்சை தொடர்ந்து ஆடிய ஒடிசா 84 ஓவர்களில் 244 ரன்னில் 'ஆல்அவுட்' ஆனது. இதனால் விதர்பா அணி 100 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 4வது ஆட்டத்தில் ஆடிய விதர்பா அணி பெற்ற 2வது வெற்றி இதுவாகும். அதிகபட்சமாக ஸ்வஸ்திக் சமால் 65 ரன்னும், கவுரவ் சவுத்ரி 47 ரன்னும், கோவிந்தா போட்டர் 46 ரன்னும் எடுத்தனர். விதர்பா தரப்பில் பார்த் ரெகாதே 5 விக்கெட் வீழ்த்தினார்.*

*வதோதராவில் நடைபெற்ற (ஏ பிரிவு) ஜார்கண்ட் பரோடா அணிகள் இடையிலான ஆட்டம் 'டிரா'வில் முடிந்தது. ஜார்கண்ட் தொடக்க வீரர் ஷிகர் மோகன் 102 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். அகர்தலாவில் நடந்த (சி பிரிவு) திரிபுராவுக்கு எதிரான ஆட்டத்தில் பாலோஆன் ஆகி 2வது இன்னிங்சை தொடர்ந்து ஆடிய அசாம் 7 விக்கெட்டுக்கு 367 ரன்கள் எடுத்து 'டிரா' செய்தது. கேப்டன் டெனிஷ் தாஸ் (103 ரன்), சிப்சங்கர் ராய் (101 ரன், நாட்அவுட்) ஆகியோர் சதம் அடித்து அணியை தோல்வியில் இருந்து காத்தனர்.*

*சூரத்தில் நடந்த பெங்காலுக்கு எதிரான ஆட்டத்தில் (சி பிரிவு) பாலோஆன் ஆகி 2வது இன்னிங்சை தொடர்ந்து ஆடிய ரெயில்வே அணி 132 ரன்னில் சுருண்டது. இதனால் பெங்கால் அணி இன்னிங்ஸ் மற்றும் 120 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. பெங்கால் சுழற்பந்து வீச்சாளர் ஷபாஸ் அகமது 7 விக்கெட்டுகளை அள்ளினார்.*

# 3 சட்டமன்ற தொகுதி நிர்வாகிகளுடன் ஸ்டாலின் நேருக்கு நேர் சந்திப்பு

**சென்னை, நவ. 12–**

**3 சட்டமன்ற தொகுதியை சேர்ந்த தி.மு.க. நிர்வாகிகளுடன் முதலமைச்சர் ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார்.**

தமிழகத்தில் அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் அரசியல் கட்சிகள் தேர்தல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றன. பிரசாரம், பொதுக்கூட்டம், நலத்திட்டப்பணிகள், கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை என பல்வேறு நடவடிக்கைகளை அரசியல் கட்சிகள் மேற்கொண்டு வருகின்றன.

234 தொகுதிகளில் 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும் என்று தி.மு.க. இலக்கு நிர்ணயித்து, தேர்தல் பணியை மேற்கொண்டு வருகிறது. அவ்வப்போது எம்.பி. மற்றும் எம்.எல்.ஏ.க்கள் கூட்டம், மாவட்ட செயலாளர்கள் கூட்டங்களை நடத்தி தேர்தல் தொடர்பான பணிகள் முடுக்கி விடப்படுகிறது.

இந்த நிலையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் 'உடன்பிறப்பே வா' என்ற தலைப்பில் 234 சட்டமன்ற தொகுதியை சேர்ந்த தி.மு.க. நிர்வாகிகளை தொகுதி வாரியாக தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் சந்தித்து வருகிறார். ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிகளில் இருந்தும் 7 நிர்வாகிகளை அழைத்து,



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அருகில் அமர வைத்து 'ஒன் டூ ஒன்' சந்தித்து 5 நிமிடங்கள் கலந்துரையாடி வருகிறார். அப்போது அவர், தொகுதியின் கள நிலவரம், கட்சி பணிகள், மண்டல பொறுப்பாளர், தேர்தல் பார்வையாளர், மாவட்ட செயலாளர்கள் செயல்பாடுகள் எப்படி இருக்கிறது? என்று கேட்டறிந்து வருகிறார்.

நமது திராவிட மாடல் ஆட்சியில் செயல்படுத்திய திட்டங்களை மக்களிடம் எடுத்து சொல்ல வேண்டும். 2026 சட்டமன்ற தேர்தலில் 200 க்கும் மேற்பட்ட தொகுதிகளில் நமது கூட்டணி வெற்றி பெற வேண்டும். அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற தொகுதியாக உங்கள் தொகுதி இருக்க வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்து தேர்தல் பணியை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தல்களையும், ஆலோசனைகளையும் தி.மு.க. நிர்வாகிகளுக்கு முதலமைச்சர் வழங்கி வருகிறார்.

அதேபோல நிர்வாகிகள் தெரிவித்த கருத்துகளையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பொறுமையாக கேட்டறிந்து வருகிறார். கடந்த வாரம் நெல்லை தொகுதி நிர்வாகிகளை 'ஒன் டூ ஒன்' சந்திப்பின்போது வெற்றி பெறவில்லையென்றால் பதவிகள் பறிக்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரடி எச்சரிக்கை விடுத்தார்.

இந்த நிலையில் இன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் 'உடன்பிறப்பே வா' நிகழ்ச்சியில் புதுக்கோட்டை, வேதாரண்யம், பல்லாவரம் ஆகிய 3 சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகளுடன் ஒன் டூ ஒன் சந்திப்பு நடத்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார். அப்போது தொகுதி நிலவரம், வெற்றி வாய்ப்பு, தேர்தல் பணி உள்ளிட்டவை குறித்து அவர்களிடம் மு.க.ஸ்டாலின் கேட்டறிந்தார்.

வேதாரண்யம் தொகுதியை இந்த முறை வென்றெடுக்க வேண்டும் என நிர்வாகிகளுக்கு முதலமைச்சர் உத்தரவிட்டார். கடந்த முறை 12,329 வாக்குகள் வித்தியாசத்தில் வேதாரண்யத்தில் தி.மு.க. வேட்பாளர் தோல்வியடைந்த நிலையில் முதல்வர் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

இன்று வரை மொத்தமாக 37 நாட்களில் 79 சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகளை மு.க.ஸ்டாலின் சந்தித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கரூர் சம்பவம்: கூட்ட நெரிசலில் காயம் அடைந்தவர்களிடம் சிபிஐ விசாரணை

**கரூர், நவ. 12–**

**கரூரில் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பான வழக்கில் காயம் அடைந்தவர்கள் இன்று காலை சிபிஐ அதிகாரிகள் முன் விசாரணைக்கு ஆஜராகினர் விளக்கம் அளித்தனர்.**

கரூர் வேலுச்சாமிபுரத்தில் செப்டம்பர் 27–ந் தேதி விஜய் பங்கேற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் பிரசாரக் கூட்டத்தில் நெரிசலில் சிக்கி 41 பேர் பலியாகினர். 110 பேர் காயமடைந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக உச்ச நீதிமன்ற உத்தரவின்படி சிபிஐ அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த நிலையில், நெரிசல் சம்பவம் நடைபெற்றபோது அங்கு ஆம்புலன்ஸுடன் வந்திருந்த வாகன ஓட்டுநர்களுக்கு சிபிஐ அதிகாரிகள் ஏற்கெனவே சம்மன் அனுப்பியிருந்தனர்.

இதுவரை சுமார் 20க்கும் மேற்பட்ட ஆம்புலன்ஸ் வாகன ஓட்டுநர்கள் மற்றும் ஆம்புலன்ஸ் வாகன உரிமையாளர்கள் ஆஜராகி சிபிஐ அதிகாரிகளின் கேள்விகளுக்கு பதிலளித்தனர். மேலும், சென்னை பனையூரில் உள்ள தவெக அலுவலக உதவியாளர் குரு சரணிடமும் அண்மையில் சிபிஐ அதிகாரிகள் விசாரணை விசாரணை மேற்கொண்டனர்.

இந்த நிலையில் கூட்ட நெரிசலில் சிக்கி காயம் அடைந்தவர்களிடம் சிபிஐ அதிகாரிகள் கடந்த 4 நாள்களாக விசாரணை மேற்கொண்டு வந்தனர். 5வது நாளாக சிபிஐ அதிகாரிகள் தங்கி இருக்கும் கரூர் பொதுப் பணித்துறை சுற்றுலா மாளிகைக்கு இன்று காலை 11 மணியளவில் நெரிசலில் சிக்கி காயமடைந்த மூன்று பேர் சிபிஐ அதிகாரிகள் முன் விசாரணைக்கு ஆஜராகினர்.

அவர்களிடம் சிபிஐ அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.


## ரோபஸ்ட் ஹோட்டல்ஸ் லிமிடெட்

CIN-L55101TN2007PLC062085

பதிவு அலுவலகம்: 365, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை 600018
Tel: +91 44 6100 1256 | Email: info_rhl@sarafhotels.com
Website: www.robusthotels.in

[செபி (LODR) விதிமுறைகள், 2015–ன் விதிமுறைகள் 47(1) (b)]

30 செப்டம்பர், 2025–ல் முடிந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் சுருக்கம்

இபிஎஸ் தவிர ரூ. லட்சத்தில்

| வ. எண் | விவரங்கள் | முடிந்த காலாண்டு | | | இன்றைய தேதி வரையான புள்ளி விவரங்கள் | | முடிந்த ஆண்டு |
|---|---|---|---|---|---|---|---|
| | | 30.09.2025 | 30.06.2025 | 30.09.2024 | 30.09.2025 | 30.09.2024 | 31.03.2025 |
| 1 | செயல்பாடுகளிலிருந்து மொத்த வருமானம் | 4,054.38 | 3,772.19 | 3,753.25 | 7,826.57 | 7,075.08 | 15,621.37 |
| 2 | காலத்திற்கான நிகர லாபம்/ (நஷ்டம்) (வரி, விதிவிலக்கான மற்றும்/அல்லது அசாதாரணமான இனங்களுக்கு முன்) | 814.36 | 598.42 | 341.55 | 1,412.79 | 441.30 | 2,208.70 |
| 3 | காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) வரிக்கு முன் (விதிவிலக்கான மற்றும் / அல்லது அசாதாரணமான இனங்களுக்கு பின்) | 814.36 | 598.42 | 341.55 | 1,412.79 | 441.30 | 2,208.70 |
| 4 | காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) வரிக்கு பின் (விதிவிலக்கான மற்றும் / அல்லது அசாதாரணமான இனங்களுக்கு பின்) | 583.62 | 402.74 | 228.97 | 986.37 | 365.05 | 1,645.90 |
| 5 | நடப்பு காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம் / (நஷ்டம்) வரிக்கு பின் மற்றும் பிற விரிவான வருமானம் வரிக்கு பின்) | 584.39 | 403.51 | 228.60 | 987.91 | 364.31 | 1,648.98 |
| 6 | சம பங்கு மூலதனம் | 1,729.17 | 1,729.17 | 1,729.17 | 1,729.17 | 1,729.17 | 1,729.17 |
| 7 | இருப்பு (மறுமதிப்பீட்டு கையிருப்பு தவிர) முந்தைய ஆண்டு தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலைக் குறிப்பில் காட்டப்பட்டுள்ளது | | | | | | 52513.45 |
| 8 | ஒரு பங்கு சம்பாத்தியம் (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகளுக்கு) (இபிஎஸ்) | | | | | | |
| | 1. அடிப்படை : | 3.38 | 2.33 | 1.32 | 5.70 | 2.11 | 9.52 |
| | 2. பலமிழந்தது : | 3.38 | 2.33 | 1.32 | 5.70 | 2.11 | 9.52 |

குறிப்பு: SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிமுறைகள், 2015–ன் விதி 33–ன் கீழ் மேற்குறிப்பிட்டுள்ளவை பங்கு சந்தையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 30 செப்டம்பர், 2025–ல் முடிந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாகும். முடிவுகளின் முழு வடிவம் பங்குச் சந்தைகளின் இணையதளங்களான www.bseindia.com, www.nseindia.com மற்றும் நிறுவனத்தின் இணையதளமான www.robusthotels.in–ல் கிடைக்கும்.

இடம்: சென்னை
நாள் : 11.11.2025

ரோபஸ்ட் ஹோட்டல்ஸ் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/–
அருண் குமார் சரஃப்
இயக்குனர்
DIN 00339772


# டெல்லி கார் வெடிப்புக்கு பாதுகாப்பு தோல்வியே காரணம்: காங்கிரஸ்

**புதுடெல்லி, நவ. 12–**

**டெல்லி கார் வெடிப்பு சம்பவம் பாதுகாப்பு தோல்வியே காரணம் என்று காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால் தெரிவித்துள்ளார்.**

டெல்லி செங்கோட்டை அருகே நேற்று முன் தினம் மாலை கார் வெடித்த சம்பவத்தில் 13 பேர் பலியான நிலையில் 25க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்த சம்பவம் தொடர்பான விசாரணையை தேசிய புலனாய்வு முகமையிடம் (என்ஐஏ) மத்திய உள்துறை அமைச்சகம் ஒப்படைத்துள்ளது. இது பயங்கரவாதத் தாக்குதல் என முதல்கட்டத் தகவல்கள் வெளியாகியிருக்கும் நிலையில், அதிகாரப்பூர்வ அறிக்கை இன்னும் வெளியிடப்படவில்லை.

இந்த நிலையில் திருவனந்தபுரத்தில் காங்கிரஸ் பொதுச்செயலாளர் கே.சி. வேணுகோபால் செய்தியாளர்களிடம் கூறியதாவது:–

கடந்த நாடாளுமன்றக் கூட்டத்தொடரில், இந்தியாவில் பயங்கரவாதத் தாக்குதல் நடப்பதில்லை என்று மத்திய உள்துறை அமைச்சர் கூறினார். அப்போதே கவனக் குறைவு வேண்டாம், நாட்டின் பாதுகாப்பு மிகவும் முக்கியமானது என்று நாங்கள் கூறினோம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக தலைநகரிலேயே இந்த சம்பவம் நடந்துள்ளது. இதற்குப் பின்னால் இருக்கும் முழுமையான காரணத்தை மக்கள் அறிய விரும்புவதால், முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும். வலுவான விசாரணை அமைப்பை அரசு உருவாக்க வேண்டும். கடந்த கால வரலாற்றை நீங்கள் காணலாம். இது ஒரு தெளிவான பாதுகாப்புத் தோல்வி. உள்துறை அமைச்சரின் தார்மீக பொறுப்பு எங்கே? எனத் தெரிவித்தார்.

# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் சமுதாயத் திறன் பயிற்சி: 50 ஆயிரம் பேர் பயன்

சென்னை, நவ. 12–

தமிழ்நாடு மகளிர் மேம்பாடு நிறுவனத்தின் மூலம் தமிழ்நாடு முழுவதும் 2,500 சமுதாயத் திறன் பயிற்சி பள்ளிகள் உருவாக்கப்பட்டு அதன் மூலம் 50 ஆயிரம் பேர் பயனடைந்துள்ளனர்.

இது தொடர்பாக தமிழ்நாடு மகளிர் மேம்பாடு நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

2025–26ஆம் ஆண்டில் கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தருவதை கருத்தில் கொண்டு, 42,000 இளைஞர்களுக்கு திறன் பயிற்சியுடன் கூடிய வேலை வாய்ப்பும், சுய வேலைவாய்ப்பு பயிற்சிகளும் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, திறன் பயிற்சித் திட்டங்களின் மற்றுமொரு முயற்சியாக சமுதாயத் திறன் பயிற்சி பள்ளிகள் வாயிலாக பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. சமுதாயத் திறன் பயிற்சி பள்ளிகள் என்பது, உள்ளூரில் உள்ள அனுபவமிக்க நிபுணர்களையே முதன்மை பயிற்றுநர்களாகக் கொண்டு, தங்கள் சொந்த கிராமங்களில் உள்ள இளைஞர்களுக்கு தங்கள் கள அறிவை நேரடியாகப் பகிர்ந்து கொள்ளும் முறையாகும்.

சமுதாயத் திறன் பயிற்சி பள்ளிகள் வாயிலாக, கொத்தனார், எலக்ட்ரீசியன், இருசக்கர வாகன பழுது பார்ப்பு, ஏ.சி மெக்கானிக், ஆரி எம்ராய்டரி, வாகன ஓட்டுநர் உரிமம், சூரிய ஒளி பலகை நிறுவுதல், அழகு நிலைய மேலாண்மை போன்ற 30 வகையான தொழில் பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்படுகிறது. நடப்பு ஆண்டில், ரூ.25 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு முழுவதும் 2,500 சமுதாயத் திறன் பயிற்சி பள்ளிகள் உருவாக்கப்படவுள்ளன. இவற்றின் வாயிலாக 50 ஆயிரம் பயனாளிகளுக்கு பயிற்சிகள் வழங்கி வேலை வாய்ப்புகளும் ஏற்படுத்தப்பட உள்ளது. கிராமப்புற மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் குழு உறுப்பினர்களின் குடும்பத்தை சேர்ந்த 18 முதல் 45 வயது வரையிலான ஆண், பெண் என இருபாலரும் பயன் பெறும் வகையில் உள்ளூர் தேவைகளின் அடிப்படையில் பயிற்சிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

சமுதாயத் திறன் பயிற்சி பள்ளிகள் செயல்படுத்துவதற்கான திருத்தப்பட்ட கூடுதல் வழிமுறைகளின்படி முதற்கட்டமாக அனைத்து மாவட்டங்களிலும் 1,420 உறுப்பினர்களுடன் துவக்கப்பட்ட 74 சமுதாயத் திறன் பயிற்சி பள்ளிகளின் செயல்பாடுகளை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் ஆர்.வி. சஜீவனா, காணொளி வாயிலாக திட்ட அலுவலர்கள், பணியாளர்கள், பயிற்றுநர்கள், பயிற்சியாளர்கள் ஆகியோருடன் நேரடியாக கலந்துரையாடி ஆய்வு செய்தார்.

இதனைத் தொடர்ந்து, மீதமுள்ள சமுதாயத் திறன் பயிற்சிப் பள்ளிகளை விரைந்து துவக்கிட துணை முதலமைச்சர் அறிவுறுத்தியதனைத் தொடர்ந்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் 20.11.2015, 01.12.2025 மற்றும் 10.12.2025 ஆகிய நாட்களில் மூன்று கட்டங்களாகத் துவங்கப்படவுள்ளன. இலவசமாக, உள்ளூரிலேயே, குறுகிய காலத்தில், பகுதி நேரமாக வழங்கப்படும் இத்தகைய திறன் பயிற்சிகளில் கலந்து விருப்பமுள்ள இளைஞர்கள், அந்தந்த மாவட்டத்தின் மாவட்ட திட்ட இயக்குனர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் வட்டார இயக்க மேலாளர் ஆகியோரை தொடர்பு கொள்ளவும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.


## கோரமண்டல் இன்ஜினியரிங் கம்பெனி லிமிடெட்

CIN No: L74910TN1947PLC000343

பதிவு அலுவலகம் மற்றும் கார்ப்பரேட் அலுவலகம்: 'பாஸ்கன் ஃபியூச்சுரா' எண்.10/2, பழைய எண். 56L, வெங்கடநாராயண சாலை, தி. நகர், சென்னை – 600 017.
Email: general@cec.coromandel-group.com Website: www.coromandelengg.com

செப்டம்பர் 30, 2025 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

₹ லட்சங்களில் (EPS தவிர)

| விபரங்கள் | முடிவடைந்த காலாண்டு | | | முடிவடைந்த ஆறு மாதங்கள் | | முடிவடைந்த ஆண்டு |
|---|---|---|---|---|---|---|
| | 30 செப்டம்பர் 2025 | 30 ஜுன் 2025 | 30 செப்டம்பர் 2024 | 30 செப்டம்பர் 2025 | 30 செப்டம்பர் 2024 | 31 மார்ச் 2025 |
| | தணிக்கை செய்யப்படாதது | | | தணிக்கை செய்யப்படாதது | | தணிக்கை செய்யப்பட்டது |
| செயல்பாடுகளின் மொத்த வருமானம் | 1344.30 | 859.01 | 994.05 | 2203.31 | 1754.20 | 3128.89 |
| நிகர லாபம் / (நஷ்டம்) காலத்திற்கு (வரிக்கு முன், விதிவிலக்கானது மற்றும்/அல்லது அசாதாரண வகைகள்) | 3.39 | 6.32 | (118.28) | 9.71 | (453.93) | (95.98) |
| நிகர லாபம் / (நஷ்டம்) காலத்திற்கு வரிக்கு முன், (அசாதாரண விதிவிலகிற்குப் பின் மற்றும்/அல்லது அசாதாரண வகைகள்) | 3.39 | 6.32 | (118.28) | 9.71 | (453.93) | (95.98) |
| நிகர லாபம் / (நஷ்டம்) காலத்திற்கு வரிக்கு பின், (அசாதாரண விதிவிலகிற்குப் பின் மற்றும்/அல்லது அசாதாரண வகைகள்) | 3.39 | (72.51) | 11.13 | (69.12) | (305.01) | 41.49 |
| காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் [காலத்திற்கான வருமானம் உள்ளடக்கிய லாபம் (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்)] | 3.39 | 7.01 | 11.13 | 10.40 | (305.01) | 277.71 |
To:
Govardhana H P (JD2), 37 Y,
No.13/31, Govindan Street,
Arundhathi Nagar, Perambur
Barracks, Chennai-600 012.
Office address: Eicher Motors Limited, Royal Enfield - Tech Centre, No.295, Rajiv Gandhi Salai (OMR) Sholinganallur, Chennai-600 119
Designation: Assistant Manager,
Emp No.E05806
Mr. K.Venkatesan (JD4)
No.13/6, Ground Floor,
Vivek Nagar, Kolathur,
Chennai-600 099
Office address: St.Joseph's College of Engineering, OMR, Chennai-600 119
Designation: Driver, Card NO. 644

This is to inform that the Hon'ble Subordinate Judge at Alandur, was pleased to order notice to you in the above said Execution petition for recovery of money and the same was posted for your appearance before the Hon'ble Subordinate Judge at Alandur on 17.12.2025 at 10.30 a.m. If you failed to appear on that day, you will be set exparte and the order passed against you.

**S.J.Thamizhselvi**
Counsel for Decree Holder

---

**BEFORE THE SUB COURT AT ALANDUR**
**O.S. No. 135 OF 2024**

M/s. Bank of Baroda,
Represented by its Branch Manager,
Adambakkam Branch
No.2 (1st Floor), City Limit Road,
Secretariat colony, Adambakkam,
Chennai – 600 088. ...PLAINTIFF
-VS-
Helan,
No. 13a, Ground Floor Mohanapuri,
3rd Street, Adambakkam,
Chennai – 600 088.
....DEFENDANT
TO,
Helan,
No. 13a, Ground Floor Mohanapuri,
3rd Street, Adambakkam,
Chennai – 600 088.

Please take notice that the above suit was filed by the plaintiff against the Defendant for recovery of money to the tune of Rs. 1,75,735/- (Rupees One Lakh Seventy Five Thousand Seven Hundred and Thirty Five Rupees Only) together with interest at 12% p.a with monthly rests. Wherein the above said matter came up before the Hon'ble Sub Court Judge at Alandur, Chennai, on 05-11-2025, and the Hon'ble Judge was Pleased to order paper publication to you and adjourned the matter to 27-01-2026, for your appearance, hence, this publication. Therefore, you being the Defendant, are hereby directed to appear before the Hon'ble Sub Court Judge at Alandur, Chennai, on 27-01-2026 at 10.30 am failing which the above suit will be heard and decided in you're absence.

V.KAMAL
S. MANSOOR ALI KHAN
COUNSEL FOR PLAINTIFF

---

**BEFORE THE DISTRICT CONSUMER DISPUTES REDRESSAL COMMISSION, CHENNAI (SOUTH)**
**CMP. No. 150/2025**
**EA. No. 45 of 2025**
**CC.No. 249 of 2022**

Mr. K. Mahaintheran
S/O T.Kuppusamy,
No. 1/265, B.Kalathmedu 4th street,
2nd cross street, Kottivakkam,
Chennai – 600 041.
Complainant
Vs
Mr. Senthil Kumar
S/O R. Balasubramaniam,
No.18/1, Kamarajar Salai,
Lakshmi Puram, Thiruvanmiyur,
BT, Chennai – 600 041.
Opposite Party
To
Mr. Senthil Kumar
S/O R. Balasubramaniam,
No.18/1, Kamarajar Salai,
Lakshmi Puram, Thiruvanmiyur,
BT, Chennai – 600 041.

PUBLIC NOTICE

Please take notice that the above CC.No.249 of 2022 has been filed on behalf of my client, the Complainant above named before the Hon'ble District Consumer Redressal Commission, Chennai (South).

The matter came up before the Hon'ble District Consumer Redressal Commission, Chennai (South) on 06.11.2025. The Hon'ble President was pleased to order notice by way of substituted service returnable by 04.12.2025 at 10.30 A.M.

Please take notice and enter appearance on that day either in person or through a duty instructed counsel failing which the matter will be decided in your absence.

P.Prabhu
Counsel for Complainant

# 5 ஆயிரம் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாக நடத்தி அப்போலோ மருத்துவமனைகள் சாதனை

## சேர்மன் பிரதாப் ரெட்டி பெருமிதம்

**சென்னை, நவ.12–**

**அப்போலோ மருத்துவமனைக் குழுமம் 5 ஆயிரம் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாக நிறைவு செய்து, இந்திய மற்றும் தெற்காசிய பிராந்தியத்தில் இதுவரையில்லாத வகையில் வரலாற்று சிறப்புமிக்க சாதனை படைத்திருக்கிறது.**

இந்த கௌரவமான மைல்கல்லை எட்டிய முதல் மருத்துவமனைக் குழுமம் அப்போலோ என்பது குறிப்பிடத்தக்கது.

50க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த, இறுதி நிலை கல்லீரல் நோயால் பாதிக்கப்பட்ட மருத்துவ பயனாளர்களுக்கு நம்பிக்கை அளிக்கும் நோக்கத்துடன், 25 ஆண்டுகளுக்கும் மேலாக இக்குழுமம் மேற்கொண்ட கல்லீரல் பாதிப்புக்கான முன்னோடித்துவமிக்க மருத்துவ கண்டுபிடிப்புகள், அக்கறையுடனான சிகிச்சை ஆகியவற்றின் உச்சமாக இந்த சாதனை அமைந்துள்ளது.

அப்போலோ மருத்துவமனைகள் 1998–ம் ஆண்டு நவம்பர் 15 ம் தேதி இந்தியாவில் குழந்தைகளுக்கான கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சையை முதல் முறையாக வெற்றிகரமாக மேற்கொண்டதன் மூலம், ஆசியா முழுவதும் கல்லீரல் பராமரிப்பை மறுவரையறை செய்யும் ஒரு மரபைத் தொடங்கிவைத்தது. அப்போது 20 மாதக் குழந்தையான சஞ்சய், பிலியரி அட்ரீசியா எனப்படும் பித்தநீர் அடைப்பால் பாதிக்கப்பட்டவராக இருந்தார்.

இந்த முன்னோடித்துவமிக்க மருத்துவ நடைமுறையின் மூலம் பயனடைந்த முதல் நபர் சஞ்சய் என்பது குறிப்பிடத்தக்கது. உயிருக்கு ஆபத்தான நோயை எதிர்த்துப் போராடியவர், இன்று ஒரு மருத்துவராகப் பணியாற்றி வருகிறார்.

அப்போலோ மருத்துவமனைகள் குழுமத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் டாக்டர். பிரதாப் சி ரெட்டி




இந்த வரலாற்று சிறப்புமிக்க சாதனை குறித்து கருத்துத் தெரிவிக்கையில், 5,000 கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை என்ற புதிய மைல்கல்லைத் தாண்டியிருப்பது, என்னுடைய தொலைநோக்கு கண்ணோட்டத்திற்கு சான்றாகவும், அர்ப்பணிப்புமிக்க எங்களது மருத்துவர்கள் மற்றும் ஊழியர்களின் அயராத உழைப்புக்கும், முயற்சிகளுக்கும் கிடைத்திருக்கும் பெரும் கௌரவமாகும்'' என்றார், பெருமிதத்தோடு.

நினைவு அஞ்சல் தபால் தலை

20 ஆண்டுகளுக்கும் மேலாக, கல்லீரல்சிறுநீரகம் இணைந்த மாற்று சிகிச்சைகள் போன்ற சிக்கலான அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதில் அப்போலோவின் மாற்று அறுவை சிகிச்சைத் திட்டம் முன்னோடியாக இருந்து வருகிறது. மேலும் 4மாதம் முதல் வயது வந்தோர் வரையிலான மருத்துவ பயனாளர்களுக்கு இத்திட்டம் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதில் சில குழந்தைகள் 3.5 கிலோ எடை மட்டுமே கொண்ட குழந்தைகளாக இருந்தது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தின் தேசிய அளவிலான தாக்கத்தை அங்கீகரிக்கும் விதமாக, இந்திய அரசால் வெளியிடப்பட்ட நினைவு அஞ்சல் தலைக்கு தகுதியான ஒரே கல்லீரல் மாற்று சிகிச்சைத் திட்டமாக அப்போலோ விளங்குகிறது என்றார்.

அப்போலோ மருத்துவமனைகள் குழுமத்தின் தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி, டாக்டர் மதுசிதர் கூறுகையில்,

இந்த சாதனை அப்போலோவுக்கு மட்டுமல்ல, இந்திய மருத்துவத் துறைக்கும் உத்வேகம் அளிக்கும் ஒன்றாக இருக்கிறது." என்றார்.

1998 நவம்பர் 15–ந் தேதியிலிருந்து 2025 அக்டோபர் 10–ந் தேதி வரை அப்போலோ கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைத் திட்டம் மூலம் 5,001 உறுப்பு மாற்று சிகிச்சைகளை நிறைவு செய்துள்ளது; இதில் 4,391 வயது வந்தோர் மற்றும் 611 பேர் குழந்தைகள்.

# அடுத்த தலைமுறைக்கான மின்சார ஹைபிரிட் டிராக்டர்: டாஃபே நிறுவனம் அறிமுகம்

## சேர்மன் மல்லிகா சீனிவாசன் பெருமிதம்

**சென்னை, நவ.12–**

**டிராக்டர் தயாரிப்பில் உலகின் மிகப்பெரிய நிறுவனங்களுள் ஒன்று என புகழ்பெற்றிருக்கும் டாஃபே (டிராக்டர்ஸ் அண்டு ஃபார்ம் எக்யூப்மென்ட் லிமிடெட்), ஜெர்மனி நாட்டில் நடைபெற்ற அக்ரிடெக்னிகா 2025 கண்காட்சி நிகழ்வில் டாஃபே EVX75 என்ற தனது அடுத்த தலைமுறைக்கான மின்சார ஹைபிரிட் டிராக்டரை பெருமிதத்துடன் அறிமுகம் செய்தது.**

டிராக்டர் வகையினத்தில் ஆண்டின் சிறந்த டிராக்டர் 2026 விருதுக்கான போட்டியின் இறுதிச்சுற்றில் டாஃபே EV28 மின்சார டிராக்டர் இடம்பெற்ற ஒரு வரலாற்றுச் சாதனையையும் படைத்துள்ளது.

EVX75 டிராக்டருடன், தனது புதிய வழிகாட்டல் அமைப்பையும் டாஃபே காட்சிப்படுத்தியிருந்தது. ஒரு புதிய கேப் உடன் 100 எச்.பி. திறன் கொண்ட டிராக்டர், பண்ணை மற்றும் பழத்தோட்டத்திற்கான 74 HP திறன் கொண்ட டிராக்டர் மற்றும் காம்பேக்ட் யூட்டிலிட்டி சீரிஸ் 65 HP ஆகியவற்றையும் இக்கண்காட்சி நிகழ்வில் டாஃபே அறிமுகம் செய்திருந்தது. இந்த டிராக்டர்கள் ஒவ்வொன்றும் தனிச்சிறப்போடு வடிவமைக்கப்பட்டிருக்கின்றன.

டிராக்டர் தயாரிப்பாளர் என்ற நிலையிலிருந்து வயல்கள், பண்ணைகளுக்கு முழுமையான தீர்வுகளை வழங்கும் பிசினஸ் குழுமமாக இப்போது டாஃபே தன்னை மாற்றிக் கொண்டிருக்கிறது. 100 HP – க்கும் குறைவான டிராக்டர் பிரிவில் உலகளவில் முதன்மை நிலையை அடையும் குறிக்கோளுடனும், தொலைநோக்குத் திட்டத்துடனும் டாஃபே இயங்கி வருகிறது.

டாஃபே நிறுவனத்தின் துணைத் தலைவர் டாக்டர். லட்சுமி வேணு,




இது தொடர்பாக பேசுகையில்,

“பொறியியல் நேர்த்தி, நம்பகத்தன்மை மற்றும் தரம் ஆகியவற்றிற்கு வலுவான நற்பெயரை கடந்த 65 ஆண்டுகளுக்கும் அதிகமாக உருவாக்கியிருக்கும் டாஃபே, உலகெங்கிலும் உள்ள வாடிக்கையாளர்களின் ஆழமான நம்பிக்கையை பிரதிபலனாகப் பெற்றிருக்கிறது. 80க்கும் அதிகமான நாடுகளில் செயல்பாட்டுடன் உலகின் மிகப்பெரிய டிராக்டர் தயாரிப்பு நிறுவனங்களுள் ஒன்றான நாங்கள், உலகுடன் இணைந்து, உலகிற்காக புதுமையான கண்டுபிடிப்புகளை தொடர்ந்து செய்து வருகிறோம்; உலகெங்கிலும் உள்ள விவசாய பெருமக்களுக்கு மேம்பட்ட, நவீனமான மற்றும் நம்பகமான தீர்வுகளை நாங்கள் வழங்கி வருகிறோம்” என்றார்.

டாஃபே – ன் உலகளாவிய செயல்உத்தியை வலியுறுத்திப் பேசிய டாஃபே – ன் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் மல்லிகா ஸ்ரீனிவாசன், “உலகளவில் அதிக எண்ணிக்கையில் விற்பனையாகும் வகையினமான 100 HP திறனுக்கும் குறைவான பிரிவில்,



உலகளவில் தலைமைத்துவ நிலையை அடைவதே டாஃபே யின் இலக்காகும். ‘உலகைப் பண்படுத்துவோம்’ என்ற எமது கோட்பாட்டிற்கு இணக்கமாக உலகெங்கிலும் உள்ள விவசாயிகளுக்கு திறன்மிக்க எளிதில் கிடைக்கக்கூடிய மற்றும் நிலைப்புத்தன்மையுள்ள இயந்திரமயமாக்கல் தீர்வுகளை வழங்குவது என்ற டாஃபே – ன் மிகப்பெரிய தொலைநோக்கு திட்டத்தின் ஒரு பகுதியாக உலகளவில் வலுவான செயலிருப்பை கட்டமைக்கும் நடவடிக்கை இருக்கிறது என்றார்.

**பெயர் மாற்றம்**

**DHINESH**
மனைவி பெயர்: SAVITHA KANNA SRINIVASAN,
பிறந்த தேதி: 05-05-1985
சொந்த மாவட்டம்: செங்கல்பட்டு
குடியிருப்பு முகவரி Alan Kudil, பிளாட் எண் 1, 5வது தெரு, பாலார் நகர், செங்கல்பட்டு – 603101 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி
**DHINESHBABU**
என அழைக்கப்படுவேன்.
**DHINESH** (பழைய பெயர்)

**பெயர் மாற்றம்**

நான், **SHRIRAM N**
த/பெ. Thiru Srinatarajan
பிறந்தது 07 ஆகஸ்ட் 1996
பிறந்த மாவட்டம்: சென்னை
வசிப்பிடம் பழைய எண்: 34/16, புதிய எண்.14/16, மாதாங்கி பிளாட்ஸ், செட்டி தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600015.
இனி முதற்கொண்டு
**SHRIRAM SRINATARAJAN**
என்று அழைக்கப்படுவேன்.
**SHRIRAM N**

**பொது அறிவிப்பு**

இதன்மூலம் பொது மக்களுக்கு அறிவிப்பது என்னவென்றால், எனது கட்சிகாரர்கள் திரு. V.V. நாகேந்திரன் மற்றும் திருமதி N. சாந்தி அவர்கள் திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி கிராமம், M.G. நகர், 1 ஆவது, குறுக்கு தெரு, பழைய சர்வே எண் 300 (Part), புதிய சர்வே எண் 300/13 ல் உள்ள பிளாட் எண் 26 க்கு 2016 சதுரடி மனையை வங்கி ஏலத்தின் மூலமாக கிரையம் பெற்று, அப்பத்திரம் 5878/2024 பதிவாகி பூர்ணமாக அனுபவித்து வருகிறார்கள். மேற்படி கிரைய பத்திரம் அசல், அதனுடன் அசல் மூலபத்திரங்களையும் மேற்படி V.V.நாகேந்திரன் நகல் எடுப்பதற்காக பூந்தமல்லி பேருந்து நிலையத்திற்கு அருகமையிலுள்ள நகலகத்திற்கு கடந்த 01.11.2025 அன்று பிற்பகல் 2 மணிக்கு நகல் எடுக்க சென்ற போது, அதில் ஒரு அசல் தாய் பத்திரமான, பூந்தமல்லி சார்பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள 29.10.1993 தேதியிட்ட கிரைய பத்திர ஆவண எண்: 5355/1993 மட்டும் காணாமல் போய்விட்டது, எங்கு தேடியும் கிடைக்கவில்லை. மேற்படி ஆவணத்தை வைத்திருக்கும் எந்தவொரு நபரோ நிறுவனமோ அல்லது ஏதேனும் உரிமை, பாத்தியதை அல்லது கோரிக்கை அல்லது இது சம்மந்தமாக வேறு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 7 நாட்களுக்குள் கீழே கையொப்பமிடப்பட்டவருக்கு எழுத்துப்பூர்வமாக ஆவணச்சான்றுகளுடன் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

S. ராமன், வழக்கறிஞர்.
எண்: 28/33, 1வது புது தெரு, லஷ்மிபுரம், குரோம்பேட்டை, சென்னை–600 044, செல்: 98945 63626

**BEFORE THE HON'BLE VIII ASSISTANT. JUDGE, CITY CIVIL COURT, CHENNAI**
**OS.No.2393 of 2024**

The Tamil Nadu Circle Postal Co Operative Bank Ltd., Rep. by its Secretary in charge G.Sivakumar ...Plaintiff

-Vs-

The Senior Superintendent, Rail Mail Service (RMS), Chennai Sorting Division, Chennai - 600 003 and 3 others ...Defendants

To
R.Udayakumar, S/o.V.Ramapathiran
No.1/23, E2 West Avenue Street, Muthamizh Nagar, Kodungaiyur, Chennai -600 18
...2nd Defendant

Please take notice that the Plaintiff bank has filed the aforesaid OS before the Hon'ble VIII Assistant Judge, City Civil Court, Chennai for recovery of surety loan due amount from you.

In the above said matter, the Hon'ble Court was pleased to order notice to you through paper publication returnable by 20.11.2025.

Therefore, you are required to be present either in person or through your Counsel before the Hon'ble VIII Assistant Judge, City Civil Court, Chennai on 20.11.2025 at 10.15 a.m. failing which the matter will be decided in your absence.

**R.MALAICHAMY**
Counsel for plaintiff

**BEFORETHE HON'BLE VIII ASSISTANT. JUDGE, CITY CIVIL, COURT, CHENNAI**
**I.A.No. 3 of 2024**
**In**
**OS.No. 2393 of 2024**

The Tamil Nadu Circle Postal Co Operative Bank Ltd., Rep. by its Secretary in charge G.Sivakumar ..Petitioner/Plaintiff

-Vs-

The Senior Superintendent, Rail Mail Service (RMS), Chennai Sorting Division, Chennai -600 003 and 3 others ...Respondents/Defendants

To
R.Udayakumar, S/o.V.Ramapathiran
No.1/23, E2 West Avenue Street, Muthamizh Nagar, Kodungaiyur, Chennai-600 118.
...2nd Respondent/2nd Defendant

Please take notice that the Plaintiff bank has filed the aforesaid OS before the Hon'ble VIII Assistant Judge, City Civil Court, Chennai for recovery of surety loan due amount from you.

In the above said matter, the Hon'ble Court was pleased to order notice to you through paper publication returnable by 20.11.2025.

Therefore, you are required to be present either in person or through your Counsel before the Hon'ble VIII Assistant Judge, City Civil Court, Chennai on 20.11.2025 at 10.15 a.m. failing which the matter will be decided in your absence.

**R.MALAICHAMY**
Counsel for Petitioner/Plaintiff

**BEFORE THE HON’BLE XV ADDITIONAL JUDGE, CITY CIVIL COURT (SINGARAVELAR MALIGAI) AT CHENNAI**
**I.A. 5 OF 2024**
**In**
**A.S. No. 118 of 2019**

M.Gurunathan ... Appellant / Petitioner

Vs

Muniyandi & 13 Others ...Respondents/Respondent

TO,
Mrs. M. Pullammal, W/o Muniyandi, No 9/1, Srinivasapuram, Pattinapakkam, Chennai-600 028
Mr.M. Nagarajan, S/o Muniyandi, NO 988 (155 backside) Srinivasapuram, Pattinapakkam, Chennai-600 028
Mr. M. Muneeswaran, S/o Muniyandi, No 97, Bharathi Nagar, Chinna Karakottai Mandaiveli, Raja Annamalai Puram, Chennai- 600 028
Mrs.K. Marieswari, D/o Muniyandi, No 1251 Srinivasapuram, (Kudiasai Pakkuthi) Pattinapakkam, Chennai-600 028
Mrs.R.Lakshmi, W/o Ramamurthy, No. 9/1 Srinivasapuram, Pattinapakkam, Chennai-600 028

In the above matter the Hon’ble Additional XV Additional District Judge, City Civil Court has ordered notice to you returnable by 21-11-2025 for your appearance in the Appeal. Hence, make yourself convenient to appear on 21-11-2025 before the Hon’ble Additional XV Additional District Judge, City Civil Court, failing which the matter will be decided in your absence.

**D.MEENAKSHI**
Counsel for Appellant

**ஆபரேஷனல் எனர்ஜி குரூப் இந்தியா லிமிடெட்**

OEG INDIA

பதிவு அலுவலகம்: ஏ, 5வது தளம், கோகுல் ஆர்கேட்– கிழக்கு விங், எண். 2 மற்றும் 2ஏ, சர்தார் பட்டேல் ரோடு, அடையார், சென்னை 600 020.
Tel: 044-43949300, Web Site: www.oegglobal.com, Email Id: natarajan@oegindia.com
CIN: L40100TN1994PLC028309

**செப்டம்பர் 30, 2025 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகள்**

SEBI (பட்டியல் கடமைகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிமுறைகள், 2015ன் விதிமுறை 33ன் கீழ், ஆபரேஷனல் எனர்ஜி குரூப் இந்தியா லிமிடெட்டின் "OEGIL" செப்டம்பர் 30, 2025 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் தணிக்கைக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, நவம்பர் 11, 2025 அன்று நிறுவனத்தின் இயக்குனர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு, பங்குச் சந்தைகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

செப்டம்பர் 30, 2025 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான விரிவான முடிவுகளை பின்வரும் இணையதளங்களில் காணலாம்:

1. நிறுவனம் - www.oegglobal.com
2. பங்குச் சந்தை - www.msei.in

நிறுவனத்தின் நிதிநிலை முடிவுகளைப் பார்க்க விரைவு பதில் (QR) குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

ஆபரேஷனல் எனர்ஜி குரூப் இந்தியா லிமிடெட்டிற்காக
ஒப்பம்/-
செயல் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்
DIN: 00052842

இடம் : சென்னை
தேதி : 11 நவம்பர், 2025

Raj TV The People's Channel

**ராஜ் டெலிவிஷன் நெட்ஒர்க் லிமிடெட்**

CIN: L92490TN1994PLC027709
பதிவு அலுவலகம் : 32, போயஸ் சாலை, இரண்டாவது தெரு, தேனாம்பேட்டை, சென்னை –600 018.
Telephone: 044-24351307/1898, E-mail: comp_secr@rajtvnet.in , Website: www.rajtvnet.in

**செப்டம்பர் 30, 2025 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்**

தணிக்கைக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், நிறுவனத்தின் இயக்குனர்கள் குழு, நவம்பர் 11, 2025, செவ்வாய்கிழமை அன்று நடைபெற்ற கூட்டத்தில், செப்டம்பர் 30, 2025 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகளை அங்கீகரித்துள்ளது.

கூறப்பட்ட நிதிநிலை முடிவுகள் மற்றும் சட்டப்பூர்வ தணிக்கையாளரின் அறிக்கை ஆகியவை நிறுவனத்தின் இணையதளம் www.rajtvnet.inல் கிடைக்கின்றன, மேலும் விரைவு பதில் (QR) குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலமும் அதைப் பார்க்கலாம்.

குழு உத்தரவுப்படி
ராஜ் டெலிவிஷன் நெட்ஒர்க் லிமிடெட்டிற்காக
எம். ராஜேந்திரன்
நிர்வாக இயக்குனர்
DIN: 00821144

இடம்: சென்னை
தேதி : நவம்பர் 11, 2025

**குறிப்பு: மேற்கண்ட தகவல்கள் SEBI (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015ன் விதிமுறை 33 மற்றும் விதிமுறை 47(1)ன் படி உள்ளது.**

quintegra

**க்விண்டெக்ரா சொலூஷன்ஸ் லிமிடெட்**

CIN: L52599TN1994PLC026867
பதிவு அலுவலகம்: வெஸ்கோர் டவர்ஸ், 3வது தளம், 16 செனடாப் ரோடு, தேனாம்பேட்டை, சென்னை 600 018.

**30.09.2025 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகளின் சுருக்கம் (தனியானது)**

ரூ. லட்சத்தில்

| விவரங்கள் | முடிந்த மூன்று மாதங்கள் 30.09.2025 | முடிந்த மூன்று மாதங்கள் 30.09.2024 | முடிந்த ஆறு மாதங்கள் 30.09.2025 | முடிந்த பன்னிரெண்டு மாதங்கள் 31.3.2025 |
|---|---|---|---|---|
| | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்தது |
| மொத்த வருமானம் (நிகரம்) | - | - | - | - |
| வரிக்கு பின் சாதாரண நடவடிக்கைகள் மூலம் நிகர லாபம்/(நஷ்டம்) | (3.56) | (0.35) | (6.68) | (8.10) |
| வரிக்கு பின் நிகர லாபம்/(நஷ்டம்) (அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | (3.56) | (0.35) | (6.68) | (8.10) |
| சமபங்கு மூலதனம் | 2681.38 | 2681.38 | 2681.38 | 2681.38 |
| இருப்புநிலைக் குறிப்பில் காட்டப்பட்டுள்ளபடி மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் தவிர்த்து ரிசர்வுகள் | - | - | (3987.43) | (3980.75) |
| அசாதாரண அயிட்டங்களுக்கு முன் பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (ஒன்றின் மதிப்பு ரூ.10/–) (ஏ) அடிப்படை (பி) டைலூட்டட் | (0.013) | (0.001) | (0.025) | (0.030) |
| அசாதாரண அயிட்டங்களுக்கு பின் பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (ஒன்றின் மதிப்பு ரூ.10/–) (ஏ) அடிப்படை (பி) டைலூட்டட் | (0.013) | (0.001) | (0.025) | (0.030) |

குறிப்பு:
1. மேற்கண்ட முடிவுகள் தணிக்கைக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு பரிந்துரைக்கப்பட்டு, நவம்பர் 11, 2025 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இயக்குனர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
2. SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள செப்டம்பர் 30, 2025 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. மேற்கண்ட நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ் இணையதளங்கள் www.bseindia.com, www.nse.india.com மற்றும் கம்பெனியின் இணையதளம் www.quintegrasolutions.comல் உள்ளது.
3. நிறுவனம் ஒற்றைப் பிரிவில் மட்டுமே செயல்படுகிறது.

இடம் : சென்னை
தேதி : 11.11.2025

குழுவின் சார்பாக
வி. ஸ்ரீராமன்
முழு நேர இயக்குனர்

**M/S. டாட்டியா குளோபல் வென்சர் லிமிடெட்**

Tatia GLOBAL VENNTURE LTD.

பதிவு அலுவலகம் : பழைய எண்.12, புதிய எண்.29, மூக்காத்தாள் தெரு, 2வது மாடி, புரசைவாக்கம், சென்னை – 600 007. இமெயில் : tatiainfo@gmail.com, வலைத்தளம் : www.tatia.co.in
CIN.No. L18101TN1994PLC026546

**30.09.2025ல் முடிந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்**

(ரூ. லட்சத்தில்)

| விவரங்கள் | தனியானது | | | | | | ஒருங்கிணைந்தது | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | முடிந்த காலாண்டு | முடிந்த காலாண்டு | முடிந்த காலாண்டு | முடிந்த அரையாண்டு | முடிந்த அரையாண்டு | முடிந்த ஆண்டு | முடிந்த காலாண்டு | முடிந்த காலாண்டு | முடிந்த காலாண்டு | முடிந்த அரையாண்டு | முடிந்த அரையாண்டு | முடிந்த ஆண்டு |
| | 30.09.2025 | 30.06.2025 | 30.09.2024 | 30.09.2025 | 30.09.2024 | 31.03.2025 | 30.09.2025 | 30.06.2025 | 30.09.2024 | 30.09.2025 | 30.09.2024 | 31.03.2025 |
| | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்யாதது | தணிக்கையானது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்யாதது | தணிக்கையானது |
| செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் (நிகரம்) | 34.18 | 33.37 | 21.24 | 67.55 | 49.39 | 117.86 | 36.55 | 36.24 | 24.59 | 72.79 | 54.52 | 1293.21 |
| வரிக்கு பின் தொடர் செயல்பாடுகளில் இருந்து நிகர லாபம் / (நஷ்டம்) | -3.50 | 18.09 | -14.11 | 14.59 | -0.71 | 32.05 | -8.74 | 19.31 | -41.30 | 10.57 | -27.34 | 765.73 |
| காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) | -3.50 | 18.09 | -14.11 | 14.59 | -0.71 | 32.05 | -8.74 | 19.31 | -41.30 | 10.57 | -27.34 | 765.73 |
| செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (பங்கு ஒன்றின் முகமதிப்பு ரூ.1/-) | 1516.20 | 1516.20 | 1516.20 | 1516.20 | 1516.20 | 1516.20 | 1516.20 | 1516.20 | 1516.20 | 1516.20 | 1516.20 | 1516.20 |
| கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கைபடி மறுமதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக ரிசர்வுகள் | | | | | | 889.82 | | | | | | 1612.63 |
| பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (தொடர் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகளிலிருந்து ஒவ்வொன்றும் ரூ.1/–) a. அடிப்படை | -0.00 | 0.01 | (-)0.01 | 0.01 | (-)0.00 | 0.02 | (-)0.01 | 0.01 | (-)0.03 | 0.01 | (-)0.02 | 0.51 |
| b. டைலூடட் | -0.00 | 0.01 | (-)0.01 | 0.01 | (-)0.00 | 0.02 | (-)0.01 | 0.01 | (-)0.03 | 0.01 | (-)0.02 | 0.51 |

**குறிப்புகள்** : SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் பாம்பே ஸ்டாக் எக்சேஞ்ச் லிமிடெட்டில் தாக்கல் செய்யப்பட்ட காலாண்டு / 12 மாதத்திற்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டு / 12 மாதத்திற்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் பாம்பே ஸ்டாக் எக்சேஞ்சின் இணையதளம் www.bseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளத்தில் www.tatia.co.in உள்ளது.

M/s. டாட்டியா குளோபல் வென்சர் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/-
S. P. பரத் ஜெயின் டாட்டியா
நிர்வாக இயக்குனர்
DIN.No. 00800056

இடம் : சென்னை - 600 007
தேதி : 11.11.2025

**சதர்ன் லாடெக்ஸ் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: B-11/W, சிப்காட் தொழிற்பேட்டை வளாகம், கும்மிடிப்பூண்டி 601 201
கார்ப்பரேட் அலுவலகம்: எண்.66, நியூ ஆவடி ரோடு, 2வது தளம், எஸ்2, குறிஞ்சி அபார்ட்மெண்ட்ஸ், சென்னை 600 010
Tel:+91 44 2660 1313 | E-mail: southernlatexltd@yahoo.com | Website: www.southernlatex.in | CIN: L25199TN1989PLC017137

பிற்சேர்க்கை I
பத்திரிகையில் பிரசுரிக்கும் வகைக்கான படிவம் (தனியானது / ஒருங்கிணைந்தது)
(செபி (எல்ஓடிஆர்) ஒழுங்குமுறைகள் 2015, ஒழுங்குமுறை 47(1)(b)ஐ பார்க்கவும்)

(ரூ. லட்சத்தில்)

| வ. எண். | விவரங்கள் | முடிந்த காலாண்டு / முடிந்த நடப்பு ஆண்டு 30.09.2025 | இன்றைய தேதி வரை/முடிந்த கடந்த ஆண்டு 30.09.2025 | முடிந்த காலாண்டு 30.09.2024 |
|---|---|---|---|---|
| 1. | செயல்பாடுகளில் இருந்து மொத்த வருமானம் (இதர வருமானம் உட்பட) | 6.00 | 12.00 | 6.00 |
| 2. | நடப்பு காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு பெற்ற இனங்கள் மற்றும்/அல்லது சிறப்பு ரகங்களுக்கு முந்தையது) | 1.22 | 2.48 | 0.86 |
| 3. | வரிக்கு முந்தைய நடப்பு காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு பெற்ற இனங்கள் மற்றும்/அல்லது சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது) | 1.22 | 2.48 | 0.86 |
| 4. | வரிக்கு பிந்தைய நடப்பு காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு பெற்ற இனங்கள் மற்றும்/அல்லது சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது) | 1.22 | 2.48 | 0.86 |
| 5. | நடப்பு காலத்திற்கான மொத்த விரிவான வருவாய் (நடப்பு காலத்துக்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பிந்தையது) மற்றும் இதர விரிவான வருவாய் (வரிக்கு பிந்தையது) ஆகியவற்றை உள்ளடக்கியது) | 1.22 | 2.48 | 0.86 |
| 6. | சம பங்கு மூலதனம் | 735.92 | 735.92 | 735.92 |
| 7. | முந்தைய ஆண்டின் தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலைக் குறிப்பில் காட்டப்பட்டுள்ளபடி ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக) | (58.77) | (58.77) | (81.92) |
| 8. | பங்கு ஒன்றின் வருவாய் (தலா ரூ.10/-) (தொடர்ச்சியான மற்றும் தொடர்ச்சியில்லாத செயல்பாடுகளுக்கானது) 1. அடிப்படை | 0.017 | 0.034 | 0.012 |
| | 2. திட்பம் குறைந்தது | 0.017 | 0.034 | 0.012 |

குறிப்பு :
a) மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு/ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான படிவத்தின் சுருக்கமான அறிக்கையாகும். காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் பங்கு வர்த்தக நிறுவனங்களின் இணையதளங்கள் மற்றும் www.southernlatex.in-ல் காணலாம் அல்லது கீழே கொடுக்கப்பட்டுள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.
b) இந்த்-ஏஎஸ் விதிகள் / ஏஎஸ் விதிகளின்படி, எது பொருந்துமோ அதற்கேற்ப லாபம் மற்றும் நஷ்ட அறிக்கையில் விலக்கு பெற்ற இனங்கள் மற்றும்/அல்லது சிறப்பு ரகங்கள் சரி செய்யப்பட்டுள்ளது.
c) கணக்கியல் கொள்கைகளில் ஏற்படும் மாற்றங்களால் நிகர லாபம்/நஷ்டம், மொத்த விரிவான வருமானம் அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய நிதி அயிட்டங்(கள்) மீதான தாக்கம் ஒரு அடிக்குறிப்பு மூலம் வெளியிடப்படுத்தப்படும்.
d) மேற்கண்ட தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் தணிக்கை குழுவால் பரிந்துரைக்கப்பட்டு 10/11/2025 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

சதர்ன் லாடெக்ஸ் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/-
நீலகண்ட பிள்ளை
நிர்வாக இயக்குனர்
DIN : 00084550

இடம் : சென்னை
தேதி : 12.11.2025

# காலசக்கர அபிஷேக விழாவில் பூடான் மன்னருடன் அற்புதமான சந்திப்பு: பிரதமர் மோடி பெருமிதம்



**திம்பு, நவ. 12–**

**பூடான் தலைநகர் திம்புவில் நடந்த காலசக்கர அபிஷேக நிகழ்வில் அந்த நாட்டு மன்னரை சந்தித்தது அற்புதமாக இருந்தது என்று பிரதமர் மோடி பெருமிதத்துடன் கூறியுள்ளார்.**

2 நாள் அரசு முறைப் பயணமாக பூடான் நாட்டிற்கு டில்லியில் இருந்து பிரதமர் மோடி புறப்பட்டு சென்றார். அந்நாட்டு தலைநகர் திம்புவில் விமான நிலையத்தில் பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. பிரதமர் மோடியை பூடான் பிரதமர் ஷெரிங் டோப்கே வரவேற்றார். இதைத் தொடர்ந்து திம்புவில் உள்ள காலசக்கர அபிஷேகம் நிகழ்வில் அந்நாட்டு மன்னருடன் இணைந்து பங்கேற்றார். விழாவின் ஒரு பகுதியாக மன்னர் குடும்பத்தினருடன் கலந்துரையாடினார்.

இது குறித்து பிரதமர் மோடி சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், ''பூடான் மன்னருடன் காலசக்கர அபிஷேகம் நிகழ்வில் பங்கேற்கும் பெருமையைப் பெற்றேன். உலகெங்கிலும் உள்ள பவுத்தர்களுக்கு இது ஒரு முக்கியமான சடங்கு, இது மிகவும் கலாசார முக்கியத்துவம் வாய்ந்தது'' என குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, பூடான் மன்னர் ஜிக்மே நாம்கியேல் வாங்சுக்குடன், பிரதமர் மோடி பேச்சுவார்த்தை நடத்தினார். அவர், இந்த பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமாக அமைந்தது என்று தெரிவித்தார்.

மேலும், பிரதமர் மோடி கூறுகையில், பூடான் மன்னர் ஜிக்மே நாம்கியேல் வாங்சுக்குடன் ஒரு அற்புதமான சந்திப்பு நடைபெற்றது. இந்தியாபூடான் உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து ஆலோசித்தோம். எரிசக்தி, வர்த்தகம், தொழில்நுட்பம் உள்ளிட்ட துறையில் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து விவாதித்தேன்.

இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.

இரண்டு நாட்கள் பூடான் பயணத்தை வெற்றிகரமாக முடித்து விட்டு பிரதமர் மோடி திம்புவிலிருந்து இந்தியாவுக்கு புறப்பட்டார்.

பூடான் மன்னர் ஜிக்மே நாம்கியேல் வாங்சுக் மற்றும் பூடான் பிரதமர் ஷெரிங் டோப்கே ஆகியோர் அவரை விமான நிலையத்தில் வழியனுப்பி வைத்தனர்.

# ''ஆப்பரேஷன் சிந்தூர் 2.0 உள்ளிட்ட எந்தப் போராக இருந்தாலும் நவீன உத்திகளுடன் சந்திக்கத் தயார்:'' ராணுவ ஜெனரல் உபேந்திரா திவேதி திட்டவட்டம்

## 'ராணுவத்துக்கு ஏ.ஐ. நிபுணர்கள் தேவை'

**புதுடெல்லி, நவ. 12–**

**ஆப்பரேஷன் சிந்தூர் 2.0 அல்லது வேறு எந்தப் போராக இருந்தாலும், ஆப்பரேஷன் சிந்தூரில் மேற்கொள்ளப்பட்ட யுக்திகளை மீண்டும் பயன்படுத்துவதற்கு தயாராக இருப்பதாக ராணுவத் தலைமைத் தளபதி ஜெனரல் உபேந்திரா திவேதி திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.**

புதுடெல்லியில் நடந்த பாதுகாப்பு மாநாட்டில் அவர் பேசியதாவது:–

''இன்னும் 2 ஆண்டிற்குள் (2027) செயற்கை நுண்ணறிவு தொடர்பான துறைகளில் 23 லட்சம் வேலைவாய்ப்புகள் கிடைக்கும் எனக் கூறப்படுகிறது. ஆனால் திறமை வாய்ந்தவர்கள் அதில் பாதி மட்டுமே இருப்பார்கள்.

இந்திய ராணுவத்திற்கு இந்தத் தேவையை 'அவுட்சோர்ஸ்' செய்ய வேண்டுமென்றால், அதன் செலவு மிக அதிகமாக இருக்கும். எனவே, இதனை நாம் இன்றே தொடங்குவது முக்கியம். இந்திய ராணுவம் மற்றும் பள்ளிகளுக்கு ஏஐ நிபுணர்கள் தேவை. ஏனெனில் தேவை அதிகமாகவும், திறமை குறைவாகவும் இருக்கிறது.

முப்படைகளுக்கு தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை வாங்குவதற்கான கொள்கைகளைக் கொண்ட பாதுகாப்பு கொள்முதல் கையேடு, இந்த மாதம் வெளியிடப்பட்டது.

பாதுகாப்புத் துறையை மேம்படுத்தும், உள்நாட்டு தற்சார்பை அதிகரிக்கும் நடைமுறை வேகமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. டிசம்பர் மாதத்திற்குள் அனைத்தையும் இறுதி செய்து விடுவோம். அரிதான பொருட்களை குறைந்தபட்சம் அடுத்த நான்கு முதல் ஐந்து ஆண்டுகளுக்கு இறக்குமதி செய்யப்பட வேண்டியிருக்கும்.

### 2.10 லட்சம் கோடி முதலீடு

2019ம் ஆண்டு முதல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக மட்டும் 2.1 லட்சம் கோடியை இந்திய ராணுவம் முதலீடு செய்துள்ளது. இது ஒரு பெரிய சவால். நாங்கள் பொறுமையாக, படிப்படியான வளர்ச்சியை எதிர்நோக்கியுள்ளோம். நமது பாரம்பரிய அமைப்புகளை உடனடியாக மாற்ற முடியாது. அதனை மாற்ற குறைந்தபட்சம் 5 அல்லது 7 ஆண்டுகள் ஆகலாம். மாற்றங்கள் மூலம் அதனை சக்திவாய்ந்ததாக மாற்ற வேண்டும்.

தேசிய அளவிலான திட்டங்களுடன் நாங்கள் ஒருங்கிணைந்து பயணிக்கிறோம். இந்தியா ஏஐ திட்டத்தில் நாங்கள் ஏற்கனவே கையெழுத்திட்டு விட்டோம். அதேபோல, விண்வெளி, குவாண்டம் மற்றும் 6ஜி திட்டங்களிலும் நாங்கள் இணைந்து பணியாற்றி வருகிறோம்.

திறந்த மூல பகுப்பாய்வு மற்றும் முன்கணிப்பு பகுப்பாய்வு ஆகியவை ஆப்பரேஷன் சிந்தூர் 1.0ல் எங்களுக்கு மிகவும் உதவியது. இந்தியா மட்டுமின்றி வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்களும் எங்களுக்கு உதவினர்.

### அதிகாரம் படைத்தவர்களாக...

ஆப்பரேஷன் சிந்தூர் 1.0ல் நாங்கள் மிகவும் அதிகாரம் படைத்தவர்களாக இருந்தோம். நிறைய பாடங்களைக் கற்றுக்கொண்டோம். எனவே, ஆப்பரேஷன் சிந்தூர் 2.0 அல்லது வேறு எந்தப் போராக இருந்தாலும், இந்த திட்டங்களை சிறப்பாக பயன்படுத்துவதற்கு தயாராக இருக்கிறோம்''.

இவ்வாறு அவர் கூறினார்.

# கோவில் காவலாளிகள் கொலை வழக்கு: கொலையாளியை சுட்டுப்பிடித்த போலீசார்

**ராஜபாளையம், நவ. 12–**

**ராஜபாளையம் அருகே நள்ளிரவில், கோவிலில் நடந்த கொள்ளை முயற்சியை தடுத்த இரு காவலாளிகள் வெட்டி படுகொலை செய்யப்பட்ட வழக்கில், நாகராஜ் என்பவரை போலீசாரை துப்பாக்கியால் சுட்டுப்பிடித்தனர்.**

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகேயுள்ள தேவதானத்தில், சேத்தூர் ஜமீனுக்கு பாத்தியப்பட்ட பிரசித்தி பெற்ற நச்சாடை தவிர்த்தருளிய சுவாமி கோவில் உள்ளது. இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகத்திற்கு உட்பட்ட இக்கோவிலில், நேற்று முன்தினம் இரவு பணியில் காவலாளிகளாக அப்பகுதியை சேர்ந்த பேச்சிமுத்து, 50, சங்கரபாண்டியன், 65, ஆகியோர் பணிபுரிந்தனர். பகல் நேர காவலாளி மாடசாமி, 65, நேற்று காலை, 6:45 மணிக்கு கோவிலுக்கு சென்ற போது, காவலாளிகள் இருவரும் கழுத்து, கை, கால் உள்ளிட்ட பல இடங்களில் வெட்டப்பட்ட நிலையில், படுகொலை செய்யப்பட்டு கிடந்தனர். கோவிலுக்குள் இருந்த சிசிடிவி கேமராக்கள் சேதப்படுத்தப்பட்டு, கேமரா பதிவு டி.வி.ஆர்., கொள்ளை அடிக்கப்பட்டிருந்தது. உண்டியல் உடைக்கப்பட்டிருந்தது.

இது குறித்து போலீசாருக்கு தெரிவிக்கப்பட்டது. தடயவியல் நிபுணர்கள் கோவிலில் இருந்த தடயங்களை சேகரித்தனர். இந்த சம்பவம் தொடர்பாக மதுரை சரக டி.ஐ.ஜி. அபினவ்குமார், விருதுநகர் மாவட்ட சூப்பிரண்டு கண்ணன், துணை சூப்பிரண்டு பசினா பீவி மற்றும் போலீஸ் அதிகாரிகள் சம்பவ இடத்தை பார்வையிட்டு தீவிர விசாரணை நடத்தி வந்தனர். இது தொடர்பாக 6 தனிப்படைகள் அமைக்கப்பட்டு தீவிர விசாரணை நடைபெற்றது.

இந்நிலையில் இன்று இரட்டை கொலையில் வடக்கு தேவதானத்தை சேர்ந்த கணேசன் மகன் நாகராஜ்(25) என்பவரை தனிப்படை போலீஸார் கைது செய்தனர். இதைத் தொடர்ந்து கொலை நடந்த சம்பவ இடத்துக்கு அவரை அழைத்துச் சென்றனர். அப்போது, நாகராஜ் திடீரென உதவி ஆய்வாளர் (எஸ்.ஐ.) கோட்டியப்ப சாமியைத் தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச் செல்ல முயற்சித்துள்ளார். நிலைமையைச் சமாளிக்கும் விதமாக, காவல் ஆய்வாளர் ரமேஷ் கண்ணன் தப்ப முயன்ற நாகராஜின் காலில் துப்பாக்கியால் சுட்டுப் பிடித்தார். தாக்குதலில் காயமடைந்த எஸ்.ஐ. கோட்டியப்ப சாமியும், துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நாகராஜும் உடனடியாக ராஜபாளையம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

முனியசாமி என்ற மற்றொரு கொலையாளி தப்பி ஓடிய நிலையில் போலீசார் அவரை தீவிரமாக தேடி வருகின்றனர்.

# சென்னையில் டாக்டர் வீடு உள்பட 2 இடங்களில் வருமான வரித்துறை சோதனை

**சென்னை, நவ. 12–**

**சென்னையில் டாக்டர் வீடு உள்பட 2 இடங்களில் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.**

சென்னை கிழக்கு கடற்கரை சாலை, ஈஞ்சம்பாக்கம் வெட்டுவாங்கேணியில் வசித்து வருபவர் டாக்டர் சாமுவேல் காட்வின். சர்க்கரை நோய் சிறப்பு நிபுணரான இவர் அதே பகுதியில் கிளினிக் வைத்து நடத்தி வருகிறார். இவரது வீட்டில் வருமான வரித்துறை அதிகாரிகள் இன்று காலையில் சோதனை நடத்தினார்கள்.

இதேபோன்று வெட்டுவாங்கேணியில் வசித்து வரும் சார்பானந்த் என்பவரது வீட்டிலும் வருமான வரி சோதனை நடைபெற்றது.2 இடங்களிலும் 5க்கும் மேற்பட்ட வருமானவரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினார்கள். வரி ஏய்ப்பு புகாரின் அடிப்படையில் இந்த சோதனை நடைபெற்றது. 2 பேர் வீட்டில் இருந்தும் பல்வேறு ஆவணங்களை கைப்பற்றிய அதிகாரிகள் அவற்றை ஆய்வு செய்து வருகிறார்கள்.

# கலை இயக்குநர் தோட்டா தரணிக்கு 'செவாலியே' விருது: ஸ்டாலின், எடப்பாடி வாழ்த்து



சென்னை, நவ. 12–

கலை இயக்குநர் தோட்டா தரணிக்கு நாளை 'செவாலியே' விருது வழங்கப்பட உள்ளது. தோட்டா தரணிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், எடப்பாடி பழனிசாமி ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர். பிரான்ஸ் அரசின் உயரிய விருதான 'செவாலியே' விருது புகழ்பெற்ற கலை இயக்குநர் தோட்டா தரணிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நாளை சென்னையில் உள்ள பிரான்ஸ் கலாச்சார மையத்தில் பிரான்ஸ் தூதர், இந்த விருதை தோட்டா தரணிக்கு வழங்கவுள்ளார். இதையொட்டி தோட்டா தரணிக்கு அரசியல் கட்சி தலைவர்கள் பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

அந்த வகையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:–

ஆக்சுபோர்டு–இல் ஒளிரும் தந்தை பெரியாரின் ஓவியத்தைத் தந்து நம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்திய தோட்டா தரணிக்கு, பிரான்சு அரசின் உயரிய அங்கீகாரமான 'செவாலியே' விருது அறிவிக்கப்பட்டிருப்பது நம் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கியுள்ளது!

அரசு கவின் கலைக் கல்லூரியில் பயின்ற தோட்டா தரணி, இந்தியாவில் இருந்து இவ்விருது பெற்ற மிகப்பெரும் ஆளுமைகளின் வரிசையில் இணையவுள்ளது பெருமையளிக்கிறது. பார் போற்றும் உங்கள் சாதனைக்குப் பாராட்டுகள்! என ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

### எடப்பாடி பழனிசாமி

அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:–

பிரபல கலை இயக்குனர் தோட்டா தரணிக்கு பிரான்ஸ் நாட்டின் உயரிய விருதான "செவாலியே" அறிவிக்கப்பட்டுள்ளதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். கலை இயக்கத்தில் பல்வேறு மெச்சத்தக்க சாதனைகள் புரிந்த அவர்தம் மணிமகுடத்தில் இவ்விருது மற்றுமோர் நன்முத்தாய் ஜொலிக்கட்டும்! என்று கூறியுள்ளார்.

இந்தியளவில் பிரபலமான கலை இயக்குநர் தோட்டா தரணி, ஓவியராக பல சாதனைகளையும் ஆச்சரியப்படுத்தும் செட் அமைப்புகளையும் செய்துள்ளார். நாயகன் திரைப்படத்தில் இடம்பெற்ற தாராவி காட்சிகள், இந்தியன் திரைப்படத்தின் சுதந்திர போராட்டக் காட்சிகள், சிவாஜியில் இடம்பெற்ற 'வாஜி.. வாஜி..' பாடலுக்கான செட் உள்பட பலவற்றை தத்ரூபமாக செட் போட்டு அசத்தியவர் தோட்டா தரணி. காதலர் தினம், தசாவதாரம், பொன்னியின் செல்வன் என தற்போது வரை செட் போடுவதில் அவரே முன்னணியில் உள்ளார்.

இறுதியாக குபேரா, ஹரிஹர வீர மல்லு, காட்டி ஆகிய படங்களுக்கு கலை வடிவமைப்பு செய்திருந்தார். இந்த நிலையில் பிரான்ஸ் கலை மற்றும் கலாசார அமைப்பின் மூலம் திரைத்துறைக்கு ஆற்றிய பணிக்காக தோட்டா தரணிக்கு செவாலியே விருது அறிவிக்கப்பட்டுள்ளது.அதே வளாகத்தில் கடந்த சில நாள்களாக தோட்டா தரணியின் ஓவியக் கண்காட்சியும் நடைபெற்று வருகிறது. பிரான்ஸின் இந்த செவாலியே விருதை தமிழில் நடிகர்கள் சிவாஜி கணேசன், கமல்ஹாசன் உள்ளிட்டோர் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

# தி.மு.க. மீது விஜய் கடும் விமர்சனம்...

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்.

போதாதென்று, அறிவுத் திருவிழா என்ற பெயரில் பரண்களில் கிடக்கும் பழைய ஓலைகளைத் தூசு தட்டித் தோரணம் கட்டப் பார்க்கும் அவர்களின் பழைய மற்றும் புதிய கொள்கை உறுதி பற்றிக் கொஞ்சமே கொஞ்சம் பார்க்கலாமா?

### பதவிக்காக பம்மினீர்களே?

யாரை ஏளனமாகப் பரிகாசம் செய்தார்களோ அவர்களிடமே பதவிக்காகப் பம்மினரே, அப்போது எங்கே போயிற்று மானம்?

ஆட்சியில் இல்லாதபோது 'தமிழ் தமிழ்' என்பதும், 'தமிழர் தமிழர்' என்பதும், ஆட்சிக்கு வந்ததும் அதிகாரப் பதவிகளுக்குள் அடக்கமாக அமர்ந்துகொண்டு, அரசியல் சாசனக் கட்டுப்பாடுகள் மீது பழி போட்டுப் பதவி சுகம் காணும்போது எங்கே போனது மண், மானம் மற்றும் மொழி மீதான கொள்கைப் பாசம்?

சாதிவாரிக் கணக்கெடுப்பு ஆய்வை நடத்தாமல் மாநில அரசுக்கு அதிகாரமில்லை என்ற அர்த்தமற்ற வாதத்தை வைத்துத் தப்பிக்கும்போது, எங்கே போனது அவர்களின் சமூக நீதிக் கொள்கை?

### அவதூறு திருவிழா

அறிவுத் திருவிழா என்று பெயர் வைத்துவிட்டு, முழுக்க முழுக்க, தமிழக வெற்றிக் கழகத்தை மட்டுமே மறைமுகமாகத் திட்டும் திருவிழாவாக அதை மாற்றியதிலேயே அது அறிவுத் திருவிழாவாக இல்லாமல் அவதூறுத் திருவிழாவாகத்தானே மாறியது?

பெரியார், அண்ணா கொள்கைகளை மறந்துவிட்ட அவர்கள், மதச்சார்பற்ற சமூக நீதிக் கொள்கைகளோடு களம் இறங்கி, யாருக்கும் எதற்கும் வளையாமல் வலம் வரும் தமிழக வெற்றிக் கழகத்தைப் பார்த்து, கொள்கையற்றவர்கள் என்று கூறுவதற்கான காரணம் அவர்களுக்கு ஏற்பட்ட உளைச்சலும் குமைச்சலுமன்றி வேறென்ன?

53 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும், ஆட்சி அதிகாரத்தைப் பகல் கனவாக்கப் போகும் ஒரு 'பக்கா மாஸ்' கட்சி வந்திருப்பதைக் கண்டு நாள்தோறும் நாக்குழறி, உளறும் அவர்களுக்கு நாம் சொல்வதெல்லாம் என்ன தெரியுமா?

பவளவிழா பாப்பா நீ
பாசாங்கு காட்டல் ஆகாது பாப்பா
நீ நல்லவர்போல நடிப்பதைப் பார்த்து
நாடே சிரிக்கிறது பாப்பா.

நேற்று நடந்த சிறப்புத் தீவிரத் திருத்தத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில்கூட யாரை விமர்சிக்க வேண்டுமோ அவர்களை விமர்சிப்பதைவிட, நம்மைத் திட்டவைத்து அகமகிழ்ந்ததே நடந்தது.

எல்லா வகையிலும் கபட நாடகம் ஆடும் அவர்களது அவல ஆட்சியின் லட்சணங்களை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்துவோம். மேலும், மக்கள் சக்தியின் மதிப்பை, வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலில் மக்களுடன் மக்களாக இணைந்து நின்று, இந்த அவதூறு மன்னர்கள் உணரச் செய்வோம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## உத்தரப்பிரதேசத்தில் வெடிபொருள்களுடன் கைதான 3 பேரிடம் விசாரணை

லக்னோ, நவ. 12–

உத்தரப்பிரதேசம் ஹாபூரில் 46 கிலோ ஹைட்ரோ ப்ளூரிக் அமிலம் மற்றும் 2.5 கிலோ வெடிபொருள்களை அனுமதியின்றி எடுத்துச் சென்றதாக 3 பேர் கைது செய்யப்பட்டதாக போலீசார் தெரிவித்தனர்.

அவர்களுக்கும், டெல்லி குண்டுவெடிப்பு வழக்கு மற்றும் பரிதாபாத்தில் வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டதற்கும் ஏதேனும் தொடர்பு உள்ளதா? என்று போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வினீத் பட்நாகர் கூறுகையில், நேற்று மாலை வழக்கமான சோதனையின் போது பில்குவா பகுதியில் உள்ள ஹினாலாபூர் பாம்பா கல்வெர்ட் அருகே நின்ற ஒருவரை தடுத்து நிறுத்தியதாகக் தெரிவித்தார். பிடிபட்டவர் மொராதாபாத் மாவட்டத்தில் உள்ள காந்த் பகுதியைச் சேர்ந்த ஷோயிப் என அடையாளம் காணப்பட்டது. அவர் பெரிய பிளாஸ்டிக் கேனை எடுத்துச் சென்று கொண்டிருந்தார்.

விசாரணையில் அடையாளம் தெரியாத நபர் ஒருவரிடமிருந்து எந்த ஆவணங்களும் அனுமதியும் இல்லாமல் வாங்கிய கன்டெய்னரில் 38 கிலோ ஹைட்ரோ ப்ளூரிக் அமிலம் இருந்துள்ளது. அவரது பதில்கள் முரண்பாடாக இருந்ததால், விரிவான விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

இன்று காலை, அதே பகுதியில் உள்ள பரதப்பூர் கிராசிங்கில் வாகனங்களைச் சோதனை செய்த ஒரு போலீஸார் குழு பைகளுடன் நடந்து சென்ற இரண்டு பேரைக் கைது செய்தது. பைகளை ஆய்வு செய்ததில் 2.5 கிலோ வெடிக்கும் பொருள்கள் மீட்கப்பட்டனர். இருவரும் சீதாபூரைச் சேர்ந்த ஷோபித் குமார் மற்றும் விஜேந்திர சிங் என அடையாளம் காணப்பட்டு விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். குற்றம் சாட்டப்பட்ட 3 பேரிடமும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பினார் தர்மேந்திரா

மும்பை, நவ. 12–

இந்தி திரையுலகில் முன்னணி நடிகரான தர்மேந்திரா, இருதய கோளாறு மற்றும் மூச்சுவிடுவதில் சிரமம் காரணமாக மும்பையில் உள்ள ப்ரீச் கேன்டி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். நேற்று (11–ந்தேதி) காலை அவர் உடல்நலக் குறைவால் காலமானதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் பரவிய நிலையில், அவர் நலமுடன் இருப்பதாக அவரது மனைவியும் எம்பியுமான ஹேமமாலினி, அவரது மகள் நடிகை ஈஷா தியோல் உள்ளிட்டோர் உறுதிப்படுத்தினர். இந்த நிலையில், அவர் நலமுடன் இருப்பதாகவும், அவரது குடும்பத்தினர் அவருக்கு வீட்டிலேயே சிகிச்சை அளிக்க முடிவு செய்துள்ளனர்.இதனால், அவர் இன்று காலை 7.30 மணியளவில் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டதாகவும், அவருக்கு வீட்டிலேயே சிகிச்சை அளிக்கப்படும் என்றும் மருத்துவர் பிரதித் சம்தானி தெரிவித்தார்.




# எரிசக்தி, வர்த்தகத்தில் ஒத்துழைப்பு: கனடா மந்திரியுடன் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஆலோசனை

**ஒண்டாரியா, நவ.12–**

**அரசு முறைப் பயணமாக கனடா சென்றுள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் அனிதா ஆனந்தை சந்தித்து பேசினார்.**

ஜி7 நாடுகளான கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி,ஜப்பான், அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தை சேர்ந்த நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் பங்கேற்கும் மாநாடு, கனடாவின் ஒண்டாரியாவில் உள்ள நயாகரா பகுதியில் நடைபெற்றது. இதில், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் கலந்து கொண்டார்.

இந்த மாநாட்டின் போது கனடா வெளியுறவுத்துறை அமைச்சர் அனிதா ஆனந்தை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சந்தித்து பேசினார். அப்போது டெல்லியில் நடத்தப்பட்ட வெடிகுண்டு தாக்குதல் சம்பவத்திற்கு அனிதா ஆனந்த் கவலை தெரிவித்தார். மேலும், இந்த துயரமான நேரத்தில் இந்திய மக்களுடன் கனடா துணை நிற்பதாகவும் கூறினார்.

தொடர்ந்து, இரு நாடுகளிடையே எரிசக்தி, வர்த்தகம் உள்ளிட்ட முக்கிய துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. குறிப்பாக இந்தியா – கனடா இடையேயான சட்ட அமலாக்க ஒத்துழைப்பு தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது.

இதனையடுத்து சஸ்காட்சுவான் மாகாண பிரதமர் ஸ்கூட் மோயி–ஐ மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் சந்தித்து பேசினார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ தளத்தில், பிரதமரை மீண்டும் சந்திப்பதில் மகிழ்ச்சி எரிசக்தி, உணவு மற்றும் உரம் ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து விவாதித்தோம். நமது உறவு குறித்த அவரது அன்பான உணர்வுகளுக்கு மதிப்பளிக்கிறோம் என தெரிவித்துள்ளார்.

Edited, Printed and Published by R. Muthu Kumar at No. 1, First Main Road, United India Colony, Kodambakkam, Chennai-600 024 and printed at Print House, No.1 First Main Road, United India Colony, Kodambakkam, Chennai-600024 on behalf of M/s. Newsmen Associates Private Limited. நிர்வாகம், விளம்பரம், சர்குலேஷன் போன்: 24733910, E-mail : makkalkural@gmail.com, ஆசிரியர் குழு இ–மெயில்: makkalkural.news@gmail.com நிறுவன ஆசிரியர்: எம். சண்முகவேல். Subject to Madras Court Jurisdiction. This Edition Covers: Chennai, Thiruvallur, Chengalpattu, Kancheepuram, Villupuram, Kallakurichi, Tiruvannamalai, Cuddalore, Vellore, Tirupathur, Ranipet Districts, Puducherry State, Parts of Andhra Pradesh, Kerala, Karnataka, Maharastra and New Delhi.